பக்கங்கள்: 13 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 23 திங்கட்கிழமை 08.03.2021 கதிர் 123

இது ரகசியம் அல்ல!

வினைவிதைத்தவன், வினையை அறுத்தேயாக வேண்டும். உப்பைத் தின்றவன் தண்ணி குடித்துத்தானாக வேண்டும். அந்த நிலைமைதான் ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடத்துக்கும்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாத பக்கம்02

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற விடயம் பிரேரணை வரைவில் பூடகமாக உள்ளது

## விளக்குகின்றார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, மார்ச் 08

இதற்கு முன்னைய தீர்மானங்களில் குறிப்பிடப்பட்ட நீதி விசாரணைக்கான கலப்பு பொறிமுறை இந்த முறை பிரேரணை வரைவில் இல்லை. ஒரு முழுமையான பொறுப்புக்கூறலை நிலைநாட்ட முடியாத நிலையில், சர்வதேச பொறிமுறை ஒன்றிற்குள் இதனை (இலங்கை விடயத்தை) நாம் உட்படுத்த வேண்டும் என்று இப்போதைய வரைவில் உள்ளது. அப்படியான சர்வதேச பொறிமுறை இன்றைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்று தான். அதைதான் சுட்டிக்காட்டுகின்றார்கள். இது போன்ற வேறு பல முக்கிய விடயங்களும் இப்போதைய பிரேரணை வரைவுக்குள் உள்ளன. அந்த வகையில் நோக்கினால் அந்த விடயங்கள் அதில் நேரடியாகக் குறிப்பிடப்படாமல் மறைமுகமாகக் கோடிகாட்டப்பட்டுள்ளன.

– இவ்வாறு விளக்கியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன். 2



## இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐ.நாவில் ஆதரிக்கவேண்டும் இந்தியா

### மோடியிடம் ஸ்டாலின் கோரிக்கை



இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப் படவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கையின் போர்க்குற்றவிசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் 2

## இலங்கைக்கு ஆதரவு வழங்கக்கூடாது; பலம் பொருந்திய நாடுகள் அச்சுறுத்தல்

### இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றது அரசு

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இருக்க, பலமான நாடுகள் ஏனைய உறுப்பு நாடுகளை அச்சுறுத்துகின்றன.

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே 11



## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டி கறுப்பு ஞாயிறு தினப் போராட்டம்



கறுப்பு ஞாயிறு தினத்தை அடையாளப்படுத்தும் வகையில் நேற்று நாடெங்கும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அந்தவகையில் கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்திலும் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கொழு ம்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து பௌத்த மத குருமாரும் பங்கேற்றனர்.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் அனைவரும் கறுப்பு ஆடைகளை 2

## பேரணியில் செல்லவில்லை என பொலிஸுக்கு மணி வாக்குமூலம்

யாழ்ப்பாணம், மார்.08

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான பேரணியில் நான் பங்கு கொள்ளவில்லை. பேரணி சென்ற சமயம் அந்த வீதியால் வேறு அலுவலாக சென்றேன் என யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தி தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரணியானது பெப்ரவரி 03ஆம் திகதியில் இருந்து 07 ஆம் திகதி வரையில் இடம்பெற்றது. இதற்கு பருத்தித்துறை நீதிமன்றம் உட்பட பல நீதிமன்றங்கள் தடையும் விதித்தன. 11

## முதலில் சட்டப் பிரச்சினைக்குத் தீர்வு; அதன்பின்பே மாகாண சபைத் தேர்தல்

### ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு



தேர்தல் முறைமை தொடர்பில் தற்போது நிலவும் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு முன்வைக்கப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் 2

## இரண்டு மாதக் குழந்தை கொரோனாவுக்குப் பலி!

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட இரண்டு மாதங்களேயான குழந்தை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தது.

வெலிமடை பிரதேசத்தை சேர்ந்த இந்தக் குழந்தை 11

## 500 ஐத் தாண்டியது கொரோனாச் சாவு!

இலங்கையில் மேலும் 5 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார். 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெறியையும் மதவாத முரணிலையையும் நரித் தந்திரமாகப் பயன்படுத்திய ராஜபக்ஷக்கள் அதன் பிரதிபலிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டதாக தென்னிலங்கை அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

நேற்று கத்தோலிக்கர்கள் நடத்திய கறுப்பு ஞாயிறு எதிர்ப்பு நடவடிக்கை பெரு வெற்றி என்கின்றனர் அவர்கள்.

ஏற்கனவே பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு அட்டகாசம் காரணமாக ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பீடத்தின் மீது தமிழர்களும் முஸ்லிம்களும் – இந்துக்களும் இஸ்லாமியர்களும் – பெரும் கொதிப்பிலும் சீற்றத்திலும் உள்ளனர்.

இப்போது அந்த வரிசையில் கத்தோலிக்கர்களும் சேர்ந்து விட்டனர் என்பதையே நேற்றைய கறுப்பு ஞாயிறு நிகழ்வு வெற்றி எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் கத்தோலிக்கர்களும், சிங்களக் கத்தோலிக்கர்களும் மொழி கடந்து, மத ரீதியாக தமது உணர்வலையைப் பிரதிபலிக்கும் காலகட்டம் வந்துள்ளது.

தனித்து பௌத்த, சிங்கள இன வெறியை மட்டும் நம்பி, அந்தப் பேரினவாதத்தைத் தூண்டி, இனியும் ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பீடத்தைக்கொண்டு செல்வது கஷ்டமான காரியம் என்கின்றனர் அவதானிகள்.

முப்படைகளையும் வளைத்துப் போட்டுள்ள ராஜபக்ஷக்கள் இது முப்படைகளின் ஆட்சி என்ற நிலைப்பாட்டை படையினர் மத்தியில் விதைத்து ஆட்சியைக் கொண்டு செல்லுகின்றனர்.

ஆட்சியைக் கைபற்றவும், தக்க வைக்கவும், தாங்கள் ஊக்குவித்துத் தூண்டி, நிலை நிறுத்தி வைத்திருக்கும் பௌத்த பேரினவாதம், ஒரு நாள் தங்களுக்கு இசைவில்லாத நிலைப்பாட்டை எடுத்தாலும், அப்போது எழக்கூடிய இக்கட்டு நிலையைக் கையாள்வதற்கு 'முப்படைகளின் ஆட்சி' என்ற இப்போதைய 'பாவ்லா' நடிப்பு தமக்குக் காவலரணாக உதவும் என்று ராஜபக்ஷக்கள் நம்புகின்றனர்.

எது, எப்படியென்றாலும் 'வாளெடுத்தவன் வாளால் அழிவான்' என்பது போல பேரினவாத துர்மார்க்கத்தைத் தூண்டி அதன் மூலம் ஆட்சிப் பீடத்தைப் பிடித்தவர்கள் அதே பேரினவாதத்துக்கு பலியாகி ஆட்சியைப் பறிகொடுப்பது தவிர்க்க முடியாத நியதியாக இருக்கக் கூடும்.

இந்துக்கள், இஸ்லாமியர்களைத் தொடர்ந்து கிறிஸ்தவர்களும் – மொழி கடந்து – பேரினவாத வெறிப் போக்குக்கு எதிராகத் தமக்குள் அணிதிரளத் தொடங்கியிருக்கின்றமை ஆறுதல் தரும் செய்தி. நேற்றைய கறுப்பு ஞாயிறு அனுஷ்டிப்பு வெற்றியளித்திருக்கின்றமை அந்த ஆறுதலைத்தான் தந்து நிற்கின்றது.

★ ★ ★

புதுடில்லியில் இலங்கைத் தூதுவர் பதவி நீண்ட பதினான்கு மாதங்களாக வெறுமையாக உள்ளது.

மூத்த சிவில் அதிகாரியான ஒஸ்ரின் பெர்னாண்டோ கடந்த ஜனவரியில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவியை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார். அதற்குப் பின்னர் புதிய இலங்கைத் தூதுவர் அங்கு செல்லவுமில்லை, பதவி ஏற்கவுமில்லை.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட அமைச்சரவை அந்தஸ்துத் தரத்துடன் புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படுகின்றார் என கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால் சுமார் ஓராண்டு தாண்டியும் அவர் இன்னமும் புதுடில்லிக்குப் போய் தமது பதவியை ஏற்கவேயில்லை. எனினும் இந்த மாத இறுதியில் அவர் புதுடில்லிக்குச் சென்று பதவியேற்பார் எனக் கொழும்பு வட்டாரங்கள் சில எதிர்வு கூறின. ஆனால். அதனை முழுமையாக ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதேசமயம், புதுடில்லியில் உள்ள 92 நாடுகளின் தூதரகங்கள் அங்கிருந்தபடியே இலங்கை விடயங்களையும் கையாளும் படி அந்தந்த நாட்டு அரசாங்கங்களினால் பணிக்கப்பட்டுள்ளன. வேறு 41 நாடுகள் மட்டுமே இலங்கையில் தத்தமது தூதரகங்களைப் பேணுகின்றன. 92 நாடுகள் புதுடில்லியில் நிலை கொண்டபடி, அங்கிருந்தவாறு தமது நாட்டுக்கான கொழும்பு விடயங்களைக் கையாளுகின்றன.

– மின்னல் –

## சர்வதேசக் குற்றவியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணித் தலைவி சிறிகாந்தன் கலைவாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஐ.நா. மனித உரிமை பேரவையிலே முன்வைக்கப்பட்டுள்ள வரைவு சம்பந்தமான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. இந்த தடவையாவது குழப்பம் அற்ற நிலைமை இருக்குமா எனவினாவுகின்றனர்.

நாடாளுமன்னத்தில் அங்கம் வகிக்கும் 3 தமிழ்க் கட்சிகள் இணைந்து ஜனவரி 16 ஆம் திகதி ஓர் கடிதம் எழுதனோம். அதுவே ஒன்றாக இலகுவான விடயமாக இருக்கவில்லை.

ஓர் அணி சொன்னது – இந்தப் பேரவையில் நிறைவேற்றப்படுபவை பிரயோசனம் அற்றவை என்றனர் (நாம் அல்லர்). இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படக் கூடாது, இது தேவையில்லாத விடயம், பொறுப்புக் கூறல் என்கின்ற விடயம் இந்த பேரவையில் இருக்கும் வரையும் எமக்கு பொறுப்புக் கூறலிற்கான நீதி கிடைக்க மாட்டாது, ஆகையினாலே அந்த பேரவை தொடர்பில் கவலைப்படத் தேவையில்லை என்றது அந்த அணி.

இன்னுமோர் அணியோ (அதுவும் நாம் அல்லர் ) ஏதோ ஒரு மட்டத்தில் – இந்த விடயம் சர்வதேச மட்டத்தில் இருக்க வேண்டும், முழுவதுமாக வெளியே கொண்டு போய்விடக்கூடாது என்றனர்.

நாம் இருவருடனும் இணங்கினோம்.

ஒரு தளத்திலே – சர்வதேசத்திலே – இருக்க வேண்டும். ஒரு இடத்திலும் இல்லாமல் போகும் நிலமை வரக்கூடாது என்றனர். நாம் இணங்கினோம்.

ஆனால் பொறுப்புக்கூறல் விடயம் மனித உரிமைப் பேரவையால் விலக்கப்படக் கூடாது என்பதிலும் இணங்கினோம். ஏனெனில் மனித உரிமை பேரவையில் நாடுகளைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் எடுக்க முடியாது என்றது ஒரு அணி. அதனால் பொறுப்பு கூறல் என்னும் விடயம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இருக்கின்றபோது சம்பந்தப்பட்ட நாட்டின் இணக்கத்துடனேயே அந்த பொறுப்புக் கூறலை முன்னெடுக்க முடியும். ஆனபடியால்தான் 2015இல் இருந்து நிறைவேற்றப்பட்ட 30/1, 34/1, 40/1 ஆகிய மூன்று தீர்மானங்களும் இலங்கையின் இணக்கத்தோடு முன்னெடுக்கப்பட்டது. ஒரு கலப்பு நீதிமன்ற பொறிமுறை விவரிக்கப்பட்டு இலங்கையின் இணை அனுசரணை பெறப்பட்டது.

இலங்கை ஜெனிவாவில் இணக்கத்தை கொடுத்திருந்தாலும் வெளியில் வந்து, அதற்கு மாறாக, சர்வதேச நீதபதிகளை அனுமதிக்க மாட்டோம் என்றனர்.

அங்கே பேரவையில் இணக்கத்தை கொடுத்து விட்டு, இங்கே சிங்கள மக்களிடத்தில் இரட்டை வேடம் இடம்பெற்றது. இப்போது இரட்டை வேடம் கிடையாது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் சென்ற வருடம் பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு எழுத்தில் உத்தியோகபூர்வமாக இந்தத் தீர்மானங்களுடன் நாம் இணங்கிப்போக மாட்டோம் என அறிவித்தனர்.

ஆகையினாலே பொறுப்புக்கூறல் என்கின்ற விடயம் அங்கு நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. ஆகவே அந்த அணியோடும் இணங்கினோம்.

அதனால் சந்தோசமாக கூறினோம். இங்கு பிரயோசனம் இல்லையென நீங்கள் 10 வருடங்களாகக் கூறுகின்றீர்கள், நாம் இலங்கை அரசோடு 5 வருடம் இணக்கத்தை ஏற்படுத்தி, இந்த நீதியை பெறும் முயற்சியில் ஈடுபட்டோம், இப்போது நாமும் கூறுகின்றோம் அங்கே போறுப்புக்கூறல் செய்ய முடியாது என்றோம்.

ஆகவே ஜனவரியில் கொழும்பில் மூன்று கட்சிகளும் ஏற்படுத்திய இணக்கம் என்னவென்றால் பொறுப்புக் கூறல் விடயத்தை ஐ.நா.ம.உ. பேரவையில் இருந்து வெளியே எடுத்துவிட வேண்டும். அதுவே பிரதானமான இணக்கப்பாடு . இதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டும் என சொன்னோம். சொல்கின்றபோது நாங்கள் இணங்கிய விடயம் அங்கே கொண்டு செல்வது இயலாத காரியம், அதாவது இப்போது உள்ள சூழ்நிலையில் அது முடியாத காரியமாகவே தோன்றுகின்றது, ஏனெனில் சர்வதேச குற்றவியல் நீதமன்றிற்கு கொண்டு செல்வதானால் 3 விடயங்கள் இருக்க வேண்டும். ஒன்று – ரோம் சட்டத்தில் அந்த நாடு ஒப்பமிட்டிருக்க வேண்டும். அல்லது குறித்த விடயம் தொடர்பில் விசாரணைக்கு அந்த நாடு தானாக இணக்கம் தெரிவிக்க வேண்டும். அதுவும் இந்த நாடு – இலங்கை – செய்யப்போவது கிடையாது.

மூன்றாவது விடயம் இவை இல்லாது விடின் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் மூலம் மட்டும்தான் குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த முடியும்.

இதனால் சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தல் சாத்தியமற்றதாக தோன்றுகின்றது ஆனாலும் சாத்தியமற்றதாகத் தோன்றுவதனால் பேசாமல் விட்டு விட முடியாது. ஏனெனில் ஒரு நாட்டைஜ் கட்டுப்படுத்தும் நீதிமன்ற பொறிமுறை சர்வதேச பொறிமுறை ஒன்றுதான் இருக்கின்றது. ஆகையினாலே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து பொறுப்புக்கூறல் விடயத்தை வெளியே எடுத்து, அதனை திரும்பவும் ஐ.நா. செயலாளர்நாயகத்திடம் அனுப்பி, பொதுச் சபை மூலமாக அல்லது பாதுகாப்பு சபை மூலமாக குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று சொன்னோம்.

இன்று பிரேரணை சமர்ப்பித்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இவ் விடயத்தை நேரடியாகக் குற்றவியல் நீதமன்றில் இதனைப் பாரப்படுத்த முடியாது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இதனைப் பாரப்படுத்தக்கூடிய ஐ.நாவின் ஒரேயொரு அங்கம் பாதுகாப்புச் சபை மட்டும்தான். அதன் பொதுச் சபை கூட இதனைச் செய்ய முடியாது. ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு இதில் சிக்குவதில்லை. அதிகாரம் இந்தச் சபையிடம் இல்லை.

இவ்வாறான குழப்பத்தில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவின் கருத்துகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு காரசாரமான பதில் வழங்கியுள்ளது.

அதில், இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என சம்பந்தர் ஐயா கோரியுள்ளார்.

இந்த வரைவில் மாற்றம் செய்வதற்கு, அதற்கு வாக்களிக்க ஏற்கனவே இணங்கிய ஒவ்வொருரின் இணக்கத்தையும் ஒவ்வொரு மாற்றத்தின் போதும் திரும்பத் திரும்ப பெற வேண்டும்.

சர்வதேசத் தலையீடு, மேற்பார்வை தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்பது விருப்பமான நிலைப்பாடு. இதற்காகவே அது நிறைவேற்றப்பட வேண்டும். தோல்வி அடைந்தால் சர்வதேச மேற்பார்வை இலங்கை தொடர்பில் 2 ஆண்டுகளிற்கு இருக்க மாட்டாது. இதற்கு நாம் இடமளிக்க முடியாது. தொடர்ச்சியான சர்வதேச மேற்பார்வை இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இதற்கு முன்கூறிய கலப்பு பொறிமுறை இந்தமுறை பிரேரணையில் இல்லை. ஒரு முழுமையான பொறுப்புக் கூறலை நிலைநாட்ட முடியாத நிலையில் சர்வதேச பொறிமுறை ஒன்றிற்குள் இதனை நாம் உட்படுத்த வேண்டும் என்றுள்ளது. அப்படியான சர்வதேச பொறிமுறை இன்றைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்றுதான். அதைதான் சுட்டிக்காட்டுகின்றார்கள். இதில் வேறு பல முக்கிய விடயங்களும் உண்டு. அந்த வகையில் நோக்கினால் அந்த விடயம் அதில் நேரடியாகக் குறிப்பிடப்படாமல் உள்ளது.

(நிகழ்ச்சியின் விவரம் 05ஆம் பக்கத்தில்...)

## 500ஐத் தாண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்கள் நால்வரும், பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

பல்லேகலை பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதான ஆண் ஒருவரும், நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதான ஆண் ஒருவரும், பரவர்தனஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவரும், மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயதான பெண் ஒருவரும், கன்னத்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதான ஆண் ஒருவருமே இறுதியாக உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 502 ஆக அதிகரித்துள்ளது.

## ஈஸ்டர் தாக்குதலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அணிந்திருந்தனர்.

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இது கைதேர்ந்த ஒருவரால் திட்டமிடப்பட்ட மனிதப் படுகொலை. இதில் நேரடியாக தொடர்புடையவர்களுக்கும் கடமைகளைத் தவறவிட்டவர்களுக்கும் சட்டம் நீதி வழங்கட்டும்' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்ற மிகவும் கொடூரமான தற்கொலைக் குண்டு தாக் குதல்களுடன் நேரடித் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வலியுறுத்தி கத்தோலிக்க சபை அறிவித்திருந்த 'கறுப்பு ஞாயிறு' தினம் நேற்று நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் பல இடங்களிலும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாரப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்களிக்குமாறும், ஏனை உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டும் படியும் மோடியிடம் ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மு.க.ஸ்டாலின், அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் மன்றக் கூட்டத்தில் நிறைவேற்ற வலியுறுத்தி லண்டனில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் சகோதரி அம்பிகையின் உணர்வுக்கும், இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களின் உணர்வுக்கும் – தொப்புள் கொடி உறவாம் ஈழத்தமிழர்களின் மீது தமிழ்நாட்டில் வாழும் ஏழு கோடி தமிழர்களுக்கு இருக்கும் உணர்வுக்கும் இந்திய மத்திய அரசு மதிப்பளிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இதே கோரிக்கையை இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களின் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒருமுகமாக, ஏற்கனவே இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு முன்வைத்திருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தக் கோரிக்கைகளை ஆதரித்து பிரதமருக்குக் கடந்த ஜனவரி மாதத்திலேயே கடிதம் எழுதி – அதில் திராவிட முன்னேற்றக்கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டிருந்தனர்.

குறித்த கடிதத்தில், கடந்த காலத்தில் ஐ.நாவில் நடைபெற்ற வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை நினைவூட்டியிருந்ததுடன் தற்போதும் முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்தில் இந்தியா ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே, ஈழத்தமிழர் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை ஆதரித்தும் – ஈழத்தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் இந்தியா வாக்களிப்பதுடன் அதற்கு ஆதரவாக உறுப்பு நாடுகளைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குச் செல்வதை ஐ.நா. மனித உரிமை மன்றக் கூட்டத்தில் உறுதி செய்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது நேரடிப் பார்வையில் எடுத்திட வேண்டும்.

இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா எடுத்துவிடக் கூடாது என்றும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

## முதலில் சட்டப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவின் தலைவர் நிமால் ஜி புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நிலவும் சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கும் சகல கட்சிகளுக்கும் தெரியப்படுத்தியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை காப்பாற்றுகின்ற முயற்சியில் பிரபல சட்டத்தரணிகள்!

## அமைச்சர் வீரசேகர புதுக்கதை



ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட பிரதான குற்றவாளிகள் எவரும் சட்டத்தில் இருந்து தப்பிக்க முடியாத வகையில் அவர்களுக்கு எதிரான சாட்சியங்களை பலப்படுத்தி வருகின்றோம்.

எந்த வகையிலேனும் அவர்களை விடுதலை செய்வதை தடுக்கும் சகல நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குற்றவாளிகளைக் காப்பாற்ற பிரபல்யமான சட்டத்தரணிகள் முன்வந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை தற்போது சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எட்டு இடங்களில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்த இடங்கள் தொடர்பான பரிசோதனை அறிக்கையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புபட்டனர் எனக் கருதப்படும் 32 பேரும், ஏதேனும் ஒரு விதத்தில் இந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களாக 241 பேரும் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் தொடர்ச்சியாக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குற்றவாளிகளை எக்காரணம் கொண்டும் விடுதலை செய்ய மாட்டோம்.

தற்போது தடுப்புக்காவலில் உள்ள பிரதான குற்றவாளிகள் 32 பேருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரை வலியுறுத்தியுள்ளோம்.

எனினும் அவர்களுக்கு எதிரான ஆதாரங்களை மேலும் திரட்டி குற்றத்தை உறுதியாக நிரூபிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

ஏனென்றால் இந்த குற்றவாளிகளைக் காப்பாற்ற பிரபல்யமான சட்டத்தரணிகள் முன்வருகின்றனர்.

எனவே இவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் ஏதேனும் சிறிய பலவீனத்தன்மை காணப்பட்டாலும் அதனைப் பயன்படுத்தி குற்றவாளிகளைக் காப்பாற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும்.

எக்காரணம் கொண்டும் இவர்கள் தப்பிக்கவே கூடாது, இவர்களை விடுதலை செய்து மீண்டும் பிரச்சினைகளை உருவாக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

எனவே இவர்களுக்கு எதிரான சாட்சியங்களை மேலும் வலுப்படுத்தி சகலரையும் தண்டிக்கவே நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

பேராயரின் கோபம் நியாயமானது. இதனாலேயே இப்போதும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது, சாதாரண குற்றங்களை போன்றதொரு சம்பவம் அல்ல இது.

இந்த தாக்குதலுடன் தொடர்புபட்ட பலர் இன்னமும் வெளியில் உள்ளனர். இவ்வாறான தாக்குதல் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதற்காக நாம் சகல விதத்திலும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எனினும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது அதிருப்தியில் உள்ளமையை வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது கோபம் நியாயமானது, அவரின் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க அவர் ஆவேசமாக பேசுகின்றார்.

அதனை எம்மால் நிராகரிக்கவே முடியாது. ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் அமைதியாக இருக்கவில்லை.

சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம். சட்டமா அதிபரிடம் சகல ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே சட்டத்துறையே அடுத்த கட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாரா எங்கேயென தேடுகின்றோம். மேலும் சாரா என்ற நபர் தொடர்பிலும் அதிகளவில் கேள்விகள் எழுகின்றன, ஆனால் அவரும் இருந்ததாக கூறப்படும் இந்தத் தாக்குதலில் 11 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 10 பேரின் உடல்களை அடையாளம் கண்டுள்ளோம். ஒருவரது உடலை அடையாளம் காணமுடியாதுள்ளது. ஆகவே, அவர் சாராவாக இருக்கலாமா என சந்தேகப்பட்டு மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவர் உயிருடன் இல்லையா அல்லது அவர் இந்தியாவிற்கு சென்றார் எனக் கூறிவிட்டு வேறு இடங்களில் உள்ளாரா என்றெல்லாம் பல்வேறு கேள்விகள் உள்ளன. ஆனால் விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.

# பின்னணியை அறியாமல் பெண்களை விமர்சிப்பதை அனுமதிக்க முடியாது!

## ஹிருணிகா தெரிவிப்பு



பெண்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறைகள் அல்லது அவர்களால் விடப்படும் தவறுகள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு கருத்துக்கள் பகிரப்படுகின்றமை கவலைக்குரியது. இவ்வாறான சம்பவங்களின் பின்னணியை அறியாமல் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றமை முற்போக்கான செயற்பாடு அல்ல என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. அத்தோடு கொடூரமான சம்பவங்கள் சமூக வலைத் தளங்களில் கேலிக்குள்ளாக்கப்படுகின்றன. பயணப்பொதிக்குள் சடலமாக பெண்ணொருவர் மீட்கப்பட்டமையைத் தொடர்ந்து அதனைக் கொண்டு நகைச்சுவை விடயங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன. இவ்வாறு செயற்படுகின்றமை மிகவும் மோசமானதொரு விடயமாகும்.

இந்தியாவில் மருத்துவபீட மாணவியொருவர் பஸ்ஸில் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். எனினும் அவரது தனிப்பட்ட விவரங்கள் உள்ளிட்டவற்றை அந்நாட்டு அரசாங்கம் பாதுகாத்தது. அவருடைய புகைப்படம் கூட வெளியிடப்படவில்லை. ஆனால், இலங்கையில் தலையற்ற குறித்த பெண்ணின் சடலம் எனக் கூறப்படும் புகைப்படம் சமூக வலைத் தளங்களில் அதிகளவாகப் பகிரப்படுகிறது. இவ்வாறு புகைப்படத்தை பகிரும் ஒவ்வொருவரும் தமது குடும்பத்தில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றால் என்னாவாகும் என்று சிந்தித்து முற்போக்காக செயற்பட வேண்டும்.

இதே போன்று கடந்த வாரம் 9 மாத குழந்தையொன்றை இளம் தாயொருவர் தாக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது. இது கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறிருப்பினும் பெரும்பாலான பெண்கள் குழந்தை பிரசவித்த பின்னர் சுமார் 3 மாத காலத்துக்கு மன உளைச்சலுக்கு உள்ளாகுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். அவ்வாறானதொரு பின்னணியிலேயே குறித்த தாய் குழந்தையைத் தாக்கியுள்ளார். எனவே இது போன்ற சம்பவங்கள் பதிவாகும் போது அவர்களை விமர்சிக்காது, அவர்கள் தொடர்பில் கணிப்பிட்டு கருத்துக்களை வெளியிடாது பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் வடக்கில் தாயொருவர் வறுமையின் காரணமாக தன் 3 பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார். அரசாங்கத்தால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையே இவ்வாறான சம்பவங்கள் பதிவாகக் காரணமாகும். வெகு விரைவில் இலங்கை ஆர்ஜென்டினா உள்ளிட்ட நாடுகளைப் போன்றதாகிவிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தடுப்பூசி வழங்க இலஞ்சம் பெற்றவர் கைது!

கொழும்பு, மார்ச். 08

கொரோனாத்தடுப்பூசியைவழங்குவதற்கு ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்ற சுகாதார மருத்துவ பிரிவின் அலுவலக உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

மேல்மாகாண புலனாய்வு பிரிவின் அதிகாரிகளுக்கு மருதானை பகுதியில் கொவிட் தடுப்பூசி வழங்கப்படும் இடத்தில், தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவரும் நபர்களிடம் லஞ்சம் கோரப்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்திய புலனாய்வு பிரிவினர் மருதானை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கடந்த சனிக்கிழமை சந்தேக நபர் 1,000 ரூபா பணத்தை லஞ்சமாக பெற்றுக் கொள்ளும் போது கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 20 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் கீழ் செயற்பட்டு வரும் சுகாதார வைத்திய பிரிவின் அலுவலக உதவியாளரான 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் , அவரை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்காக இதுவரையில் எவரேனும் லஞ்சமாக பணம் வழங்கியிருந்தாலோ அல்லது எவரேனும் இவ்வாறு பணம் வழங்குமாறு தெரிவித்தாலோ , அது தொடர்பில் 071 – 8591563 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தெரிவிக்க முடியும்.

# அஸ்ட்ரசெனிகா கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொண்ட இராணுவத்தளபதி





இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் அஸ்ட்ரசெனிகா கொவிட் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டார்.

நாட்டின் பல பகுதிகளில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றமையைத் தொடர்ந்து, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவும் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடதக்கது.

குறித்த சந்தர்ப்பத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அருகில் இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பெண்மையைப் போற்றுதும்!

ஓர் இனம் அல்லது மக்கள் கூட்டம் எந்தளவு தூரம் நாகரிகமானது, செழுமையானது, மேன்மையானது, உயர்ந்த பண்பாட்டைக் கொண்டது என்பது பால் சமத்துவம், சமூக நீதி என்பன எவ்வளவு தூரம் நிலை நிறுத்தப்படுகின்றன என்பதில்தான் அளவிடப்பட முடியும்.

அத்தகைய பால் சமத்துவத்தை உலக சமுதாயத்திடம் வலியுறுத்தும் நாளாகக் கட்டவிழ்கின்றது இன்றைய சர்வதேச மகளிர் தினம்.

ஆணாதிக்க உலக முறைமையிலிருந்து, சமுதாயக் கெடுபிடிப் போக்கிலிருந்து, பெண்களை விடுவிக்கின்றமைக்கான – பெண்களுக்கான சமத்துவம், உரிமைகள் போன்றவற்றை வலியுறுத்தி, வென்றெடுத்து, உறுதிப்படுத்துவதற்கான – குறியீட்டு நாளாக இது கட்டவிழ்கின்றது.

தனி மனிதர்களின் இணைப்பால்தான் குடும்ப உறவுகள் உருவாகின்றன. உண்மையில் பெண்கள் மீதான ஆணாதிக்கம் அங்குதான் முதலில் ஊற்றெடுக்கின்றது. பிரவாகம் கொள்கின்றது; நிலை பெறுகின்றது.

தனித் தனிக் குடும்பங்களில் உருவாகும் ஆணாதிக்க வெறிப் போக்கு, பல சந்தர்ப்பங்களில் பெண்கள் மீதான அடக்குமுறை என்ற எல்லையைத் தாண்டி, பெண்கள் மீதான வன்முறையாகி, அதுவே பின்னர் சாதாரண வாழ்வியல் நடைமுறையாகவும் உருவெடுக்கும் குரூரத்தை நாம் எமது சமூகத்தின் மத்தியில் சகிப்புத் தன்மையுடன் சந்தித்துக் கொண்டு பார்த்திருக்கிறோம்.

இவ்வாறு அத்துமீறி செயற்படுகின்ற அராஜகம் ஒரு பக்கத்தில் என்றால், அது வாழ்வின் தவிர்க்க முடியாத யதார்த்தம் – சகஜம் – என்று கருதி அந்த அத்துமீறலை – அடாவடியை – அராஜகத்தை – அட்டகாசத்தை – சாதாரண விடயமாகப் பார்த்துப் புறமொதுக்கும் பொறுப்பற்ற போக்கு – கேவலம் – அதைவிட மோசமாக நம் மத்தியில் நீடிப்பது கொடுமையிலும் கொடுமையாகும்.

பெண்களை இழிவுபடுத்தல், பெண்ணடிமை, பெண்களை அவர்களின் நலிவுற்ற – வலுவற்ற – நிலையைப் பயன்படுத்தி சாதகமாக உபயோகித்தல், அச்சுறுத்தி போகப்பொருளாக ருசித்து, அவர்களைக் கசக்கி எறிதல், மிரட்டி அடி பணிய வைத்தல், அவர்களை பால்நிலை காரணம் காட்டி புறமொதுக்குதல், பாகுபாடு காட்டுதல் போன்றவற்றுக்கு எதிராக உலகின் கவனத்தையும் அவதானிப்பையும் திசை திருப்புவதும் –

மகளிர் தம் பெருமையை உலகம் மதித்துப் போற்றும் பெரும் மாண்பை ஏற்படுத்துவதும் –

இன்றைய சர்வதேச மகளிர் தினத்தின் இலக்கும் நோக்கும் போக்கும் ஆகும்.

பொது அறிவிலும், பொது வாழ்க்கை முறையிலும், சமூகக் கட்டமைப்பிலும், சமுதாய செயற்போக்குகளிலும், சமூகச் சீர் நெறியிலும், வியந்து போற்றுமளவுக்கு – மெச்சத்தக்க நிலைமைக்கு – நமது நவீன உலகு மேம்பட்டிருக்கின்றது என்று கூறப்பட்டாலும் பெண்மையைப் போற்றுதலில் அது திருப்திதரும் உயர்வு நிலையில் இல்லை என்பதே களயதார்த்தமாகும்.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக நம் உறவின் அனைத்து அங்கங்களிலும் நீக்கமற நிலைத்து நீடித்திருப்பவர்கள் பெண்கள். மனித உயிர்ப்பின் உற்பவமே பெண்களின் கருவறையிலிருந்துதானே தோற்றம் கொள்கின்றது?

பெண்மையைப் போற்றுதல் தமிழரின் வாழ்வியல் பண்பியலில் முக்கியமானது. உலகின் மகா சக்தி பெண் என்ற உண்மையை உலகமே ஒப்புக் கொண்டாக வேண்டும். அதனால்தான் 'சக்தி இல்லையேல் சிவனே என்று சும்மா கிட' என்ற பேச்சு மொழி நம் மத்தியில் வந்தது. சக்தி தன் பாகத்தே இல்லாவிடில் சிவமும் சவமாகி விடுவது தவிர்க்கவியலாதது.

உலக மகா சக்தி பெண்மை என்பதால்தான் தண்மை தரும் மழைக்கு மாரி என்றும், கொடுமைகளைக் களையும் சக்திக்குக் காளி என்றும், பெயரிட்டனர் நம் பெரியோர்.

எமது நாட்டைத் தாய்நாடு என்பதும், எமது மொழியைத் தாய்மொழி என்பதும், அன்னையாகிய பெண்ணுக்கு நாம் தரும் மதிப்புத்தான். நதிகள், மலைகள் போன்ற இயற்கை அன்னையின் மாண்புகளுக்கும் கூட மகளிரின் பெயரையே சூட்டுகின்றோம்.

நமது நாட்டின் சட்டங்களில் பால் சமத்துவம் கணிசமான அளவு உள்ளடக்கப்பட்டு, வலியுறுத்தப்பட்டாலும் சமூகத்தில் – சமுதாயத்தில் – அது எவ்வளவு தூரம் நடைமுறையில் சாத்தியமாகின்றது என்பது கேள்விக்குறியே.

*"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்"* – என்றான் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

அதனை மகளிர் தினமாகிய இன்று நமது சத்திய வழிகாட்டலாகக் கொண்டு பிரதிக்ஞை செய்வோம்.

# தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரிப்பதற்கு அரசு சூழ்ச்சித் திட்டம்

### சிறிதரன் தெரிவிப்பு



கொரோனாத் தொற்றால் இறந்தவர்களை அடக்கம் செய்ய இரணைதீவு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டமை தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கும் சூழ்ச்சியின் விளைவு என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சாடியுள்ளார்.

கிளிநொச்சி – இரணைதீவில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறிதரன் ஆகியோர் நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிறிதரன் –

ஜெனிவா பிரேரணையை செயலிழக்க செய்வதற்காகவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

அரசாங்கத்தின் இந்த பிரித்தாளும் சூழ்ச்சியை தமிழர்களும் முஸ்லிம்களும் நிதானமாக கையாள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் தலைதூக்க அரசு இடமளிக்காது!

### ஜனாதிபதி ஆணித்தரம்



தமிழ் அடிப்படைவாதமும், பிரிவினைவாத பயங்கரவாதமும் இஸ்லாம் மதவாத அடிப்படைவாதமும் தலைதூக்க தமது அரசாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஏப்ரல் 21 தாக்குதலுக்கு அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கமும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே பொறுப்புக்கூற வேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாததால், அவ்வாறான நிலை ஏற்பட்டமை ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாகிறது என தெரிவித்தார்.

இலங்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ் ஆதரவாளர்கள் இருப்பதுடன், ஐ.எஸ். தெற்காசியாவில் காட்டுத் தீ போல் பரவுவதாகவும் முற்போக்காக இருப்பதை விட செயற்திறன் மிக்கதாக இருக்க வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இன மற்றும் மத முரண்பாட்டை தூண்டுவதனை தடுப்பதற்கு சட்ட வரையறை தயாரிக்கப்பட வேண்டியதன் தேவையும் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.


எனினும் துரதிஷ்டவசமாக பிரதமர், விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் அதனை செய்யத் தவறிவிட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தமிழ் அடிப்படைவாத, பிரிவினைவாத பயங்கரவாதமும் இஸ்லாம் மதவாத அடிப்படைவாதமும் தலைதூக்க தமது அரசாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தற்போது தாம் அதிகாரத்தில் இருப்பதால், தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாகவும் ஈஸ்டர் தாக்குதலை விற்று தாம் அதிகாரத்திற்கு வரவில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

# தீர்வு வழங்காத பட்சத்தில் உணவு ஒறுப்பு போராட்டம்!

### வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் திட்டவட்டம்



தமக்கான தீர்வை வழங்காத பட்சத்தில் தமது போராட்டம் உணவு ஒறுப்புப் போராட்டமாக மாற்றமடையும் என வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து ஆறாவது நாளாக கவனவீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனத்தை மீளப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்து இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாகக் கடமையாற்றிய சுகாதார பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முகமாக சுகாதார பணியாளர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எனினும் குறித்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றனவாகப் பாதிக்கப்பட்ட சுகாதார பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டமையின் காரணமாக இந்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், நிரந்தர நியமன கடிதம் பெற்ற சுகாதார பணியாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வை வழங்குமாறும் நீண்ட காலமாகத் தொண்டு அடிப்படையில் வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்றனர் எனவும் எனவே தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறும் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குலக்கொழுந்து

அவளின்றி ஓரணுவும் அசையாது காண்பீர்
தவமீன்ற பூமியின் வரமவள் - புகழின்றி
வாழ்நாள் முழுவதும் கடமையைப் பேறாக்கும்
தாழாத குலக்கொழுந்தே பெண்!

- கே.எஸ்.சிவஞானராஜா -

- ப்ரியமதா பயஸ் -



# மானிடத்தே மகளிருக்கு இன்று சிறப்பு தினம்!

உலகத்தில் நடந்த அனைத்து புரட்சிகளும் ஏதோ ஒரு வகையில் வரலாற்றில் இடம்பிடித் திருக்கின்றன. ஆனால் மகளிருக்கான உரிமைகளுக்கும் அடக்கு முறைகளுக்கு எதிரானது மான போராட்டங்கள் இன்னமும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன

1789 ஆம் ஆண்டு ஜூன் 14 அன்று பிரெஞ்சுப் புரட்சியின் போது சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதிநித்துவம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து பெண்கள் போர்க்கொடி தூக்கினர்.

அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு ஆணுக்கு நிகராக பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதே பிரதானமான நோக்கமாக அன்றே இருந்தது.

பல்வேறு கலவரங்களுக்கு மத்தியில் பெண்ணுரிமை போராட்டமானது ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவியது. அங்கும் பெண்கள் அதிகளவில் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இறுதியில் பிரான்ஸில் 1848 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதியன்று பெண்கள் அரசவை ஆலோசனை குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கவும் ஒப்புதல் தரப்பட்டது.

பின்னாளில் மகளிருக்கென சிறப்பு தினம் ஒன்றை அனுசரிக்க எண்ணிய போது இந்த நாளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மார்ச் 08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது.

தாயாக, தாரமாக, அக்கா தங்கையாக, மகளாக, தோழியாக நம் உறவின் அனைத்து நிலையிலும் நிறைந்திருக்கிறார்கள் பெண்கள். எப்போதுமே உடலால் வலிமைமிக்க ஆண்களை விட மனவலிமை நிறைந்த பெண்கள் சிறப்பு மிக்கவர்களே.

அரசியல், சமூகசெயல்பாடுகள், பொழுதுபோக்கு, விளையாட்டு, தொழில்துறை என சகல துறைகளிலும் இன்று பெண்கள் இல்லாத இடங்களே இல்லை.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று சொல்வது வெறும் பழமொழிக்காக மட்டுமல்ல. ஆண்கள் துவண்டு போகும் நேரங்களில் தாங்கி பிடித்து, நேர்மறை எண்ணங்களை ஆண்கள் மனதில் விதைத்து, மீண்டும் வாழ்க்கை என்னும் பந்தயத்தில் முன்பை விட பலமடங்கு வேகத்தில் ஓட வைப்பதில் பெண்களின் பங்கு அதிகம்.

ஆனாலும் அவளின் உழைப்பிலும், உத்வேகத்திலும் குளிர்காயும் ஒரு வகை பாசிச சமூகம் அவளை இன்னமும் அடக்கிவைக்கவே முன்னின்று முயக்கிறது. பெண்களே பெண்களுக்கு எதிரி ஆகி, அவர்களின் அடிமடிவரை ஆராய்ந்து தூக்கி வீசி விடவே இந்த சமூகத்தின் புல்லுருவிகள் துடித்துக்கொண்டு நிற்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உலகின் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய அரசியல் பாரம்பரியத்தை கொண்ட நாடாக இலங்கை இருந்தாலும், அரசியலில் பெண்களுக்கான இடம் இன்னமும் முயல் கொம்பாகவே இருக்கிறது. இந்த நிலைமை மாறும்போதுதான் பெண்களுக்கான சுதந்திரமான வாழ்வியலையும் இலங்கையில் நிலைநிறுத்த முடியும். காரணம் இலங்கையின் அரசியலே இப்போது இலங்கை மக்களின் வாழ்வியலைத் தீர்மானிக்கிறது. அந்த அரசியல் சூழலால் மட்டும்தான் பெண்களின் சுதந்திரமான சமூக சூழலை உருவாக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாக உள்ளது .

இருந்த போதும் பெண்கள், சுயசார்போடு குடும்பத்தை வழி நடத்தவும், பொருளாதார ரீதியாக வெற்றி நடை போடவும் இலங்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெரும் துணையாக திகழ்கின்றன. கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் குறைந்த வட்டியில் இக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களால் சிறு தொழில்கள் செய்து இவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய இது பக்க பலமாக உள்ளது.

இவற்றை இன்னமும் மேம்படுத்தி பாதிக்கப்பட்ட சூழலில் இருக்கும் தன்னம்பிக்கை மிக்க பெண்களை வலுப்படுத்த வேண் டும், அவர்களின் வாழ்வாதார ரத்தை மேம்படுத்த வேண்டும், அவர்களுக்கான உளவியல், வாழ்வியல் சுமுக சூழலை உருவாக்கி கொடுக்கவேண்டும் என்பது அண்மைய நாள்களில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் பெண்களைத் தொடர்பு படுத்திய சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

சமூக சேவை அமைப்புக்களும் அரச சமூகசேவை உத்தியோகத்தர்களும் இந்த விடயங்களில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பது எனது விநயமாக வேண்டுகை.

பெண்களுக்கான வன்முறைகள் மூலம் தனியே பெண்கள் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. அவர்களை சார்ந்த இருபது வீதமான அடுத்த தலைமுறை – அதாவது சிறுவர்கள் – பாதிக்கப்படுவது மிகவும் துரதிஷ்டவசமானது, அரச உத்தியோகத்தர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் அவர்கள் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை அணுகுவதற்கு பொலிஸ் மற்றும் சட்ட கட்டமைப்புகள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.



குடிமனைகளில் நடக்கும் குடும்ப வன்முறைகளை பாராமுகமாக கடந்துபோக முடியாது, ஒரு சமூகத்தின் அதி உச்ச வன்முறை கிராமங்களின் அடி அத்திபாரத்தில் தொடங்கி கொலை வரை சென்று முடிவடைகிறது.

இது அரசியல் மற்றும் புறக்காரணிகளால் ஊக்குவிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

சிறப்பான வாழ்வு என்பதற்கும் அப்பால் பெண்களுக்கான பாதுகாப்பான வாழ்வு என்பது தற்போது கரிசனை கொள்ள வேண்டிய விடயமாக மாறி இருக்கிறது .

பெண்களிற்கு ஏற்படும் உடல், உள பாதிப்புக்கள் அவர்களை சாரும் குழந்தைகளையும் 100 வீத பாதிப்படைய செய்கிறது இது மறுக்க முடியாத உண்மை.

சில சமயங்களில் இளம் சமூகத்தினை முற்றாக அழிக்கும் செயற்பாட்டுக்கு தூண்டுகிறது .

எனவே முதலில் குடும்ப வன்முறைகளை ஒழிக்க நாம் பாடுபடவும் போராடவும் வேண்டியுள்ளது.

காலங்காலமாக புரையோடிப்போய் இருக்கும் சில மூட நம்பிக்கைகளையும் பெண்களின் பக்கம் இருந்து களைய வேண்டிய கடடாயமும் இப்போது உருவாகி உள்ளது.

ஒவ்வொரு மணி நேரத்துக்கும் எங்கோ ஒரு மூலையில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் வன்முறைகளுக்கு முகம்கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்தச் சூழல் மாற இந்த எழுச்சிமிக்க நன்னாளில் அனைவரும் குரல் கொடுப்போம்.

## கொரோனாவிலிருந்து 290 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 290 பேர் பூரண குணமடைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 82 ஆயிரத்து 59 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 85 ஆயிரத்து 336 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 497 பேர் இதுவரையில், உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

## சட்டச் சிக்கல் தீர்த்ததும் மாகாணசபைத் தேர்தல்!

சட்டரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிலவும் சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கும் சகல கட்சிகளுக்கும் தெரியப்படுத்தியிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கறுப்பு ஞாயிறு தினம் மலையகத்திலும் அனுஷ்டிப்பு!

இலங்கையில் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற மிகவும் கொடூரமான தற்கொலை குண்டு தாக்குதல்களுடன் நேரடி தொடர்புடைய நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வலியுறுத்தி கத்தோலிக்க சபை அறிவித்துள்ள 'கறுப்பு ஞாயிறு' அனுஷ்டிப்புக்கு மலையகத்தில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களும் பங்கேற்றுள்ளனர்.

அந்தவகையில் ஹற்றன் பங்கு தந்தை நியூமன் பீரிஸ் தலைமையில் விசேட திருப்பலியும் நடைபெற்றது.

இதில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி குறிப்பிட்டளவான கத்தோலிக்க மக்கள் கறுப்பு உடைகளை அணிந்து கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

மேலும், மலையகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழரசின் மகளிர் தினம் கிளிநொச்சியில் நடந்தது!





இலங்கை தமிழரசுக் கட்சியின் மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் ஆரம்பமானது. கட்சியின் கொடியை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஏற்றிவைத்தமையைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

இதன்பின்னர், அன்னை பூபதிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணித் தலைவி சிறிகாந்தன் கலைவாணி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பெண்மையின் பெருமையை கண்ணெனப் போற்றுவோம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)



மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்.

மண்மகிழப் பெண் பெண்மகிழ வேண்டும். பெண்ணைத் தெய்வம் என்கிறோம். மண்ணை பூமித்தாய் என்கிறோம். ஓடிவரும் நதிகளுக்கெல்லாம் பெண்ணின் பெயரையே சூட்டி நிற்கிறோம். பிறந்த நாட்டைத் தாய் நாடு என்கிறோம். பேசும் மொழியைத் தாய் மொழி என்கிறோம். பெண்ணின் பெயரைப் பெரிதும் மதித்து இவற்றையெல்லாம் செய்கின்ற சமூகமானது பெண்மையை எப்படிப் பார்க்கிறது? அந்தப் பெண்மைக்கு எந்தளவு உயர்வினைக் கொடுக்கிறது? அந்தப் பெண்மையின் நிலைதான் என்ன? இவையெல்லாம் கேள்விகளாய் எழுந்து நிற்கின்றன!

உடல் அளவில் உறுதிமிக்கவனாக ஆண் விளங்கினாலும் மனவளவில் உறுதி மிக்கவளாகப் பெண்ணே விளங்குகிறாள். இதனால்தான் 'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்' என்று சொல்லப்படுகிறது. அவள் - தாயாக, தாரமாக , சகோதரமாக, மகளாக, தோழியாகக் கூட அமைந்து விடலாம். வீட்டின் அமைதியும், ஆனந்தமும் வெளியில் வியாபித்து சமூகத்தையே சாந்திக்கு ஆட்படுத்தும் ஆற்றல் நிச்சயம் பெண்மையின் கைகளிலேதான் தங்கியிருக்கிறது. அந்த அளவுக்கு பெண்மை என்பது வாழ்க்கையின் பெரு வெளிச்சம் எனலாம். அந்தப் பெரு வெளிச்சத்தை அளித்து நிற்கும் பெண்ணை - பெண்மையை - போற்றும் தினமாகத்தான் சர்வதேச மகளிர் தினம் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது எனலாம்.

பெண்களைப் பற்றிப் பெருமையாய் பேசும் சமூகத்தில் பெண்களின் ஆரம்ப கால நிலைமைகள் எப்படி அமைந்திருந்தன? பெண்களுக்கு இந்தச் சமூகம் - குறிப்பாக ஆணினம் - எந்தளவுக்கு சுதந்திரத்தை வழங்கி வந்திருக்கிறது?

இவையெல்லாம் வரலாறாகி நீண்டு நிற்கிறது என்பதுதான் இதற்குப் பொருத்தமான விடை எனலாம்.

தடைகள்பலவற்றைத்தகர்த்தெறிந்து, தனித்துணிவுடன் களத்தில் இறங்கி, ஆணுக்குச் சமமான நிலை பெண்களுக்கும் உண்டு - பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்று போராடிய பெண்களின் போராட்டம் வெற்றியைத் தொட்ட நாளே பெண்கள் தினமாக இன்று உலகம் முழுவதும் பரவி நிற்கிறது எனலாம்.



இவ்வாறான தினம் கொண்டாட்டம் அல்ல! போராடிப் பெற்ற தினம் என்பதே மிகவும் பொருத்தம் உடையதெனலாம்.

பெண் நலம் ஓம்பப்படாத இடத்தில் வேறு எவ்வித நலனும் நிலவுவது அரிது. ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலைமையைப் பொறுத்தே நிற்கும் என்னும் திரு. வி. கவின் கூற்று யாவரும் மனமிருத்த வேண்டியதே.

இன்று சர்வதேச மகளிர் தினம் உலகெங்கும் வரவேற்புப் பெற்று, பெண்களின் பெருமை விதந்து பேசப்படுகின்ற தென்றால் அதற்கு வித்தாக விளங்கியவர் 18 ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியில் ஒரு கிராமத்தில் பிறந்த 'கிளாரா ஜெட்கின்' என்னும் பெண்மணியாவார். இவர் இளம் வயது முதலே பெண்களின் உரிமை, பெண்களின் நலன், யாவற்றிலும் மிகுந்த அக்கறை கொண்டவராகவே இருந்தார். பெண் தொழிலாளர்களின் உரிமையை, பிரச்சினைகளை, மனமிருத்தி - உலகெலாம் ஒலிக்கும்படி செய்தமையால் - பெண்களின் இயக்கங்களுக்கும், அவர்களின் செயற்பாடுகளுக்கும் பெரும் உந்துதலை அளித்தது எனலாம்.

பெண்கள் பற்றிய உரிமைப் போராட்டங்கள் என்னும் வகையில் 1789 இல் பாரீஸில் சமத்துவத்துவத்துக்காக பெண்கள் எழுந்தனர். பெண்கள் தொடர்பான வேலை நேரங்கள், பெண்களின் வாக்குரிமை, பெண் அடிமை, விடுதலை என்னும் கோஷங்களுடன் பேரெழுச்சியாய் அப்போராட்டம் வெடித்தது. போராட்டத்தின் முடிவில் பெண்களின் கோரிக்கைக்கு பிரான்ஸ் அரசு ஒப்புதல் வழங்கியது. வழங்கிய அந்த நாள் மார்ச் 8 - 1848 ஆகும். இந்தத் திகதியும் மாதமும் மகளிர்க்கு உரிய தினம் என்னும் நிலைக்கு இட்டுச் செல்ல ஏதுவாக அமைந்தது.

பிரான்ஸில் பெண்களின் எழுச்சிபோல் 1857 இல் அமெரிக்காவில் நியூயோர்க்கிலும் பெண்களின் உரிமைக்குரல் எழுப்பப்பட்டது. பெண்கள் ஒருமித்துப் போராடினால்தான் அவர்களுக்கான உரிமைகள் கிடைக்கும் என்னும் எண்ணம் பரந்து விரிந்தது.

சர்வதேச மகளிர் தினத்துக்கு வித்திட்ட - கிளாரா ஜெட்கின் தலைமையில் 1919 இல் ஹேகனில் அனைத்துலாகப் பெண்களுக்கான மாநாடு கூடியது. இம் மாநாட்டின் தொடராக 'சர்வதேச மகளிர் அமைப்பு' உருவாக்கப்பட்டது. ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க்குடன் சில ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பலர் இந்த அமைப்பின் சார்பில் 1911 இல் மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 'சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடினார்கள். பெண்கள் பல நாடுகளிலிருந்து கலந்து கொண்ட இவ்வரலாற்று வேளையில்தான் - பெண்களுக்கான வாக்குரிமையினை அளிப்பதற்கு மன்னன் லூயிஸின் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இது இடம் பெற்றது மார்ச் மாதம் 8 ஆம் திகதியேயாகும். பெண்களின் ஒத்துழைப்பால் இவையனைத்தும் நிகழ்ந்த அந்த நாளை சர்வதேச மகளிர் தினமாக ஆண்டு தோறும் கொண்டாடும் தினமாகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

1917 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி ரஷ்யாவில் சென்பீட்டர்ஸ் நகரில் ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தை அடுத்து 1921 மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக பிரகட னப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை 1975 ஆம் ஆண்டினை சர்வதேச மகளிர் ஆண்டாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து 1977 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சர்வதேச மகளிர் தினத்தை மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன. அதனால் துணிந்த பெண்கள் முழு வீச்சுடன் முன் வந்து போராடிப் பெண்களுக்கான பல உரிமைகளை பெற்றெடுத்தார்கள். ஆனாலும் இன்னும்தான் பெண்களுக்கான பிரச்சினைகள் தொடர்ந்தபடியேதான் - தொடர் கதையாய் தொடர்கின்றன எனலாம்.

மனித வாழ்விலே பெண்ணின் பங்கு மிக மிக இன்றியமையாதது. இதனை எவருமே மறுத்துவிட முடியாது. ஆனால் அப்படிப்பட்ட பெண்களை பெண்கள் என்னும் தோற்றத்தையும் அவர்களது உடலையும் வைத்துக் கொண்டு அரங்கேறும் அவலங்கள் சொல்லமுடியாதன.

பெண்களுக்கு வாக்குரிமை எதற்கு? பெண்களுக்கு பேசும் உரிமை எதற்கு? பெண்களுக்கு வேலைபார்க்கும் உரிமை எதற்கு? பெண்களுக்கு வீட்டை விட்டு வெளியில் செல்லும் உரிமை எதற்கு? பெண்கள் என்றால் திருமணம் செய்ய உதவும் ஒரு மனித உருவம். பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் இயந்திரம். ஆணுக்கு இன்பத்தை அளிக்கும் ஒரு நுகர்வுப் பொருள். இப்படியெல்லாம் எண்ணி பெண்ணினத்தை வதைத்த விவகாரம் மறைக்க முடியாத வரலாறாகும். அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து போராடிப் பெண்கள் வந்து நிற்கும் நிலையினை இன்று உலகெங்கும் காணுகிறோம். ஆனாலும் பெண்களுக்கான அச்சம் என்னும் நிலைமட்டும். இன்னும் அகலவே இல்லை.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் என்று அவர்கள் உயர்வு பெற்று நிற்கிறார்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. நாட்டின் ஜனாதிபதியாக, பிரதம மந்திரியாக, உயர்நீதித்துறையின் தலைவராக, அரச பதவிகளில் உயர் நிலையில் இருப்பவர்களாக, தொழில் முனைபவர்களாக, பல்கலைக்கழக துணை வேந்தர்களாக, கல்லூரி முதல்வர்களாக, பத்திரிகைகளின் பிரதம ஆசியர்களாக இன்று உலகம் முழுவதும் பெண்கள் மிளிர்ந்து நிற்கிறார்கள். மருத்துவம், தொழில் நுட்பம், கலைகள் என்று பெண்களின் ஆளுமை பல்கிப் பெருகி நிற்பதையும் காணுகிறோம்.

ஆனாலும் பெண்கள் என்னும் படைப்பால் அவர்களை நோக்கும் விதமும்,அவர்களை வதைக்கும் விதமும் , சமூகத்தை விட்டு அகலவே இல்லை என்றே எண்ண முடிகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

"உடல் அளவில் உறுதிமிக்கவனாக ஆண் விளங்கினாலும் மனவளவில் உறுதி மிக்கவளாகப் பெண்ணே விளங்குகிறாள். இதனால்தான் 'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்' என்று சொல்லப்படுகிறது. அவள் – தாயாக, தாரமாக , சகோதரமாக, மகளாக, தோழியாகக் கூட அமைந்து விடலாம். வீட்டின் அமைதியும், ஆனந்தமும் வெளியில் வியாபித்து சமூகத்தையே சாந்திக்கு ஆட்படுத்தும் ஆற்றல் நிச்சயம் பெண்மையின் கைகளிலேதான் தங்கியிருக்கிறது."

# நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தி எமது போராட்டத்தைத் தடுக்க முயற்சி!

## சிவயோகநாதன் குற்றச்சாட்டு

நீதிமன்றைத் தவறாக வழி நடத்தி ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கும் போராட்டத்தைத் தடுக்கமுனைவதாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் எஸ். சிவயோகநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளவர்களுக்குத்தடையுத்தரவுகளை வழங்கும் நடவடிக்கைகளை கடந்த சனிக்கிழமை மாலைபொலிஸார் முன்னெடுத்தனர்.

இதன்போது, போராட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்றிருந்த பொலிஸார், தடையுத்தரவுகளில் உள்ள பெயர்களை குறிப்பிட்டபோது அதில், போராட்டத்தில் உள்ளவர்கள் யாரும்இல்லாத காரணத்தால் அங்கிருந்தவர்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொண்டு சென்றனர்.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ்நிலையம் ஊடாக இந்தத் தடையுத்தரவுகளை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக சிவயோகநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சர்வதேசவிசாரணையை வலியுறுத்தி, நான்காவது நாளாகச் சுழற்சி முறையிலான போராட்டம் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு சர்வதேச ரீதியில் சங்கடத்தை ஏற்படுத்துவதாகவும் போராட்டத்தில் கலந்துகொண்ட



வர்கள் முகக்கவசம் அணியாத நிலையில் இருந்தனர் எனவும் குறிப்பிட்டு குறித்த பகுதியில் போராட்டம் நடத்தக்கூடாது என்று பொலிஸார் தெரிவித்தனர் என சிவயோகநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஜனநாயக ரீதியாக தாங்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை நசுக்குவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# மைத்திரிபாலவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியுமா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைக்கேற்ப, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அரசாங்கத்திடம் கேள்வியெழுப்புவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, பேராயர் அறிவித்துள்ள கறுப்பு ஞாயிறு போராட்டத்துக்கு நாமும் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கும் முக்கிய காரணியாகக் காணப்பட்டன.

தாக்குதல்களின் பின்னர் மக்கள் மத்தியில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தியவர்கள் தற்போது முக்கிய அமைச்சுப் பதவியை வகிக்கின்றனர்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவால் தகவல்கள் தெரிந்திருந்தும் அவற்றைத் தடுக்கத் தவறியவர்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் பிரதான சூத்திரதாரிகள் தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை.

தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களினதும், தாக்குதல்தாரிகளின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களினதும் பிரதான எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது முக்கிய சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்பதேயாகும்.

எனினும் அந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. தாக்குதல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்திருந்தும் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கும். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியுடன் இணைந்து இந்த அரசாங்கம் ஆட்சியமைத்திருக்கிறது.

அவ்வாறெனில் அரசாங்கத்தின் பங்காளி கட்சி உறுப்பினரான மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதே எமது கேள்வியாகும்.

அத்தோடு சஹ்ரானுக்கு உதவியவர்கள், தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்ற சந்தேகமும் சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, பேராயர் அறிவித்துள்ள கறுப்பு ஞாயிறு போராட்டத்துக்கு நாமும் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம்.

கொவிட் சடலங்களை அடக்கம் செய்வதற்காக வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் கூறப்பட்டுள்ளமைக்கேற்ப சடலங்களை அடக்கம் செய்வதற்கான இடங்கள் கொழும்பிலும் உள்ளன.

அவ்வாறிருந்த போதிலும் இரணைதீவைத் தெரிவு செய்து மீண்டும் மக்கள் மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. – என்றார்.

# போலி ஆவணங்கள் தயாரித்த சந்தேக நபர்கள் இருவர் கைது!

போலி ஆவணங்களை தயாரித்து வாகன மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர்களிருவரை மேல்மாகாண புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

வாடகைக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனத்தில் வாகனங்களை பெற்று அவற்றுக்கான போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்து, குறைந்த விலையில் வேறு நபர்களுக்கு விற்பனை செய்த இரு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் முல்லேரியா மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் இதுபோன்ற 17 குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 14 மீனவர்கள் வடமராட்சியில் கைது!

சட்டத்துக்குப் புறம்பாக சுருக்கு வலை மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 14 மீனவர்கள் வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4 படகுகளில் தொழிலில் ஈடுபட்ட நாகர்கோவிலைச் சேர்ந்த 14 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 14 பேரும் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மீனவர்கள் 14 பேரும் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# ஜூலை மாதம் மாகாண சபைத் தேர்தல் நடக்கும்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தகவல்

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல்முறைமைப்படிஎதிர்வரும்ஜூலை மாதம் நடத்த எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபை தேர்தல் தொடர்பாகக் கருத்துரைப்பதற்கு எதிர்க்கட்சியினருக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தார்மீக உரிமை கிடையாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை இந்த மாதத்தில் இரண்டாம் வாரத்தில் நடத்த ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது.

கொவிட் – 19 வைரஸ் தொற்றின் இரண்டாம் அலையின் காரணமாக தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

பொதுத்தேர்தல் இடம்பெற்றவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் அளவிற்கு அப்போது வளங்கள் காணப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையில் நடத்தும் யோசனையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் கடந்த டிசெம்பர் மாதம் அமைச்சரவையில் முன்வைத்தார்.

இந்த யோசனை தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்க அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. ஆகவே வைரஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துகின்றமை தொடர்பாக கவனம் செலுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது.

கொவிட் –19 வைரஸ் தாக்கம் தற்போது ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை மக்கள் முழுமையாகப் பின்பற்றுகிறார்கள். ஆகவே இவ்வாறான பின்னணியில் மாகாண சபைத் தேர்தலை புதிய தேர்தல் முறைமையின் பிரகாரம் எதிர்வரும் ஜூலை மாதம் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இம்முறை மாத்திரம் பழைய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்தி எதிர்காலத்தில் புதிய தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தி, புதிய தேர்தல் முறைமையை முழுமையாகத் தேர்தல் முறைமைகளில் செயற்படுத்தலாம் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டு பிற்போடுவதாக எதிர் தரப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் குற்றஞ்சாட்டுகிறார்கள். மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்துரைக்கும் தார்மீக உரிமை இவ்விரு தரப்பினருக்கும் கிடையாது.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் படுதோல்வியடைந்தது. இவ்வாறான நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அதிலும் தோல்வியடைய நேரிடும் என்பதை நன்கு அறிந்து மாகாணசபைத் தேர்தல் திட்டமிட்ட வகையில் பிற்போடப்பட்டது. இதற்குத் தமிழ்த் தேசி



யக் கூட்டமைப்பினர் முழுமையான ஆதரவை வழங்கினார்கள்.

அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைக்கு மதிப்பளித்து செயற்படும். கடந்த அரசாங்கம் செய்த தவறைத் தொடர வேண்டிய தேவை கிடையாது. மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். நாட்டு மக்கள் தமக்கான மாகாண சபை பிரதிநிதிகளை ஜனநாயக முறைக்கமையத் தெரிவு செய்து கொள்ளலாம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

**ஜனனீ தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



# மெய்நிகர் வகுப்பறை 10

## Online Classroom

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பல கொவிட் - 19 காலகட்டத்தில் மூன்று மாத காலம் மூடப்பட்டன. பின்னர் மீளத்திறக்கப்பட்டதும் முன்னனுபவக் குறைபாடுகளுடன் மெய்நிகர் வகுப்பறைகளில் விரிவுரைகளை ஆரம்பித்தன. மெய்நிகர் வகுப்பறை கற்றல் நுட்பங்களை அறியாமாலே மெய் நிகர் வகுப்பறைகளைப் பயன்படுத்த விரிவுரையாளர்கள் ஆரம்பித்தனர். முன்னுபவக்குறைபாடுகளுடனேயே இணையவழியைப் பயன்படுத்தி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான தகவல்தொடர்புகளை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெரும்பாலான மாணவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மற்றும் வழிகாட்டிகளுடன் ஒன்லைன் முறை மூலம் தொடர்பு கொள்ள ஆரம்பித்தார்கள். அவை வினைத்திறன் பற்றாக்குறையுள்ளவையாகக் காணப்பட்டன. இதில் தொடர்பாடல் திறன்குறைபாடுகள் செல்வாக்குச் செலுத்தின. இணையவழி தொடர்பாடலுக்கான விதிமுறைகளை உருவாக்குவதில் விரிவுரையாளர்களும் நிர்வாகிகளும் திணறினார்கள். ஒரு விரிவுரையாளரின் வாட்ஸ்அப் 24 மணி நேரமும் சேவைவழங்க வேண்டியிருந்தது. அதே போன்று தொலைபேசி அழைப்புக்களும் எந்த நேரத்திலும் பதிலளிப்பதாக எதிர்பார்க்கப்பட்டது. இதில் ஒரு விதிமுறை அணுகல் அறிவிக்கப்பட்டு வினைத்திறனுள்ளதாக்கப்பட வேண்டும். அவ்வாறு நடைபெறவில்லையென்றால் மனிதத் தவறுகளால் மாணவர்கள் சலிப்படையலாம், இணையவழிக் கல்வியிலிருந்து இடைவிலகலாம். விரிவுரையாளர்களின் ஒன்லைன் கற்பித்தல் அறிவையும் தொடர்பாடல் திறனையும் வளர்ப்பதற்கு ஒன்லைன் பயிற்சிகள் தேவைப்பட்டன. ஒன்லைன் கல்வியை அமுல்படுத்துவதில் பல்கலைக்கழகங்கள் பல சவால்களை எதிர்கொண்டன. இருப்பினும் போதியளவு முன்னனுபவமின்றியே, நெருக்கடி சூழ்நிலையில் கல்வியைக் கையாள்வதில் பல்கலைக்கழகத்தின் முன் முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. பல பல்கலைக்கழகங்களில் குறைபாடுகளுடனேயே இறுதியாண்டு மாணவர்களின் கற்றல்நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது. இவற்றிற்குச் செய்யப்பட்ட ஆய்வுகள் சான்றாகும்.

பொதுவாக பல்கலைக்கழகங்கள் ஜூம், மைக்ரோசொஃப்ட் அணிகள், கூகுள் மீட் போன்ற பல்வேறு ஒன்லைன் தளங்களைப் பயன்படுத்தி ஒன்லைன் கற்றலை (இ - கற்றல்) மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனுடன் கற்கல் மேலாண்மை அமைப்பும் (**Learning Management System**) தேவைப்பட்டது. அதில் விரிவுரையாளர்களுக்கு பயிற்சிகள் தேவைப்படுகின்றன. இணையவழிக் கற்றல் பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டாலும், அது சவால்கள் நிறைந்ததாகும். கொவிட் - 19 காலகட்டத்தின் போது பல்கலைக்கழக மாணவர்கள் தனிமையாக உணர்ந்தார்கள். மன அழுத்தத்திற்கு ஆட்பட்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் இணைய வழிக்கல்வி அவர்களுக்கு ஓர் ஊக்கமளிப்பதாக, ஆறுதலளிப்பதாக அமைந்திருந்தது. இடர்மிகுகால கட்டத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே பரஸ்பர தொடர்பு அதிகரிப்பதற்கு இந்த வகைக் கல்வி முறை பங்களித்ததாக அமைந்திருந்தது. ஏதுமற்ற கற்றல்சூழலில் இது எளிதான அணுகல் முறையாகவும் மாறியது. இருப்பினும், பல மாணவர்கள் ஒன்லைன் கற்றலில் முழுக் கவனம் செலுத்துவதில் சிரமங் களை எதிர்கொண்டனர் எனக் குறிப்பிட்டனர். கற்றல் முறைகளில் திடீர் மாற்றம், அவர்களின் பொருளாதார நிலை, வீட்டில் தனிமை, அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் தகவல் தொழில்நுட்ப திறன் இல்லாமை போன்ற காரணிகளால் மாணவர்கள் கற்றலில் சிரமத்தை எதிர்நோக்கினார்கள். இணைய வழிக்கல்வி தொடர்கின்ற அதே வேளை இதனை தீர்ப்பதற்கான வழிகள் பற்றி பல்கலைக் கழகங்கள் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.



ஒன்லைன் கற்பித்தல் சுவாரஸ்யமானதாக முன்னெடுக்கப்படுவதற்கு அதனைக் கணத்துக்குக் கணம் மீளாய்வுக்கு உட்படுத்தி மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இந்தக் கற்றல் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்ட வண்ணம் இருக்க வேண்டும். கொவிட் 19 முடக்கநிலை முடிவின் போது ஆரம்பிக்கப்பட்ட மெய்நிகர் வகுப்புக்களில் ஆர்வத்துடன் பங்கு கொண்ட பல மாணவர்களின் ஆர்வம் பின்னர் படிப்படியாக குறைந்து சென்றதையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. சில மாணவர்கள் பின்னர் ஒன்லைன் முறை மீதான நம்பிக்கையை இழந்தனர் எனவும் குறிப்பிடுகின்றனர். ஒரு கட்டத்தில் மனஅழுத்தத்திற்கு வடிகாலாக இருந்த மெய்நிகர் வகுப்பறை பின்னர் மாணவர்களுக்கு மனஅழுத்தத்தை கொடுக்கின்ற ஒன்றாக மாற்றமடைய ஆரம்பிக்கின்றது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதனால் மெய்நிகர் வகுப்பறைகள் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட வேண்டும்.

ஒன்லைன் கல்வி தொலைதூர மாணவர்களுக்கான சிறந்த முறையாகும். மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் வழியாக விரிவுரையாளர்களை இலகுவில் தொடர்பு கொள்ள முடிந்தது. ஆனால் தொடர்ந்து ஈடுபடும் போது உளவியல் நெருக்கடிகளை மாணவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது - ஒன்லைன் கற்றலில். இணைய இணைப்பு வசதி ஏற்றத்தாழ்வு காரணமாக மாணவர்கள் தங்கள் கல்வியை சிறப்பாக செய்ய முடியவில்லை என்பதை தெரிவிக்கிறார்கள். இதுவொரு மனவுளைச்சலாக வளர்வதையும் அவதானிக்கலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் கொவிட்- 19 காலகட்டத்தில் தங்கள் கற்றல் - கற் பித்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முற்பட்ட போது எல்லா மாணவர்களிடமும் இணைய வசதியும் அதனை அணுகுவதற்கான கருவிகளும் இருக்கும் என்ற எடுகோளிருந்தது போலும். ஆனால் பின்தங்கிய மற்றும் கிராமப்புறங்களில் வாழ்ந்த மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு சரியான இணைய வசதிகள் கிடைக்கவில்லை. மாணவர்களுக்கு மிகவும் சாத்தியமான தொழில்நுட்ப மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் தேவைப்பட்டன. பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற அதிகமான மாணவர்கள் கீழ்மத்தியதர வகுப்பு குடும்பங்களைச் சார்ந்தவர்கள். அவர்களின் வறுமை காரணமாக மாணவர்களுக்கு தொலைத்தொடர்பு சாதனங்களை அணுகுவது மிகவும் சவாலான பணியாக இருந்தது. எனவே, கொவிட் - 19 காரணமாக நாடு மூடப்பட்ட போது லப்டொப், டெஸ்க்டொப் மற்றும் ஸ்மார்ட்போன்கள் போன்ற சாதனங்கள் இல்லாதமையால் மாணவர்கள் ஒன்லைனில் கல்வியைத் தொடர முடியாது திண்டாடினார்கள். உடனடியாக இந்த வசதிகளை ஏற்படுத்துவதில் கீழ்மத்தியதர மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் நிதி சிக்கல்களை எதிர்நோக்கினார்கள்.

இதனைவிட முக்கியமாக, கொவிட் - 19 திடீர் தாக்கம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் பீதியடைந்து, பீதியுடன் இருந்ததால், மாணவர்கள் ஒன்லைனில் படிப்பைத் தொடரும் நல்ல மனநிலையில் இருக்கவில்லை. எனவே, உயர்கல்வி போதியளவு விளைவுகளைத் தரக்கூடிய மெய்நிகர் கற்றலை நோக்கி மேலும் நகர்ந்தாக வேண்டியிருந்தது. கொவிட் - 19 இன் போது மாணவர்களுக்கான ஒன்லைன் கல்வி உளவியல் பரிமாணங்களையும் உள்ளடக்கியதாகும். இதில் இந்த உளவியல் பரிமாணங்களுக்கான தீர்வுகளுக்காக உளவியலாளர்களுடன் இணைந்து கற்றல் பொறிமுறையை உருவாக்க வேண்டியிருக்கிறது.

ஒன்லைன் கற்றலுக்கு சிறந்த ஒன்லைன் விநியோகத்தைப் பெறவேண்டும். இதற்கு 4 ஜி இணைப்பு வசதி தேவை. பல கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் 4 ஜி இணைப்பு பெறுவதில் பல சிக்கல்களை எதிர்கொண்டனர். நிலையான ஒன்லைன் இணைப்பு இல்லாத நிலையில், இடைவிடாத ஒன்லைன் கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது கடினமாக இருந்தது. இணைய இணைப்பின் வேகம் மிகக் குறைவாக இருந்தபோது, கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகள் தடைப்பட்டன. இது மாணவர்களின் ஆர்வக்குறைவுக்கு வழிவகுத்தது. இந்தச் சூழலில் மெய்நிகர் வகுப்புக்களுக்குத் தாம் அழைத்ததும் மாணவர்கள் உடன் வருவார்கள் என்று ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் எதிர்பார்ப்பது பொருத்தமற்றது. மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு புதிய வழிகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

மேற்கத்தேய நாடுகளின் இறக்குமதிகளைக் கண்மூடி ஏற்றுக்கொள்ளும் வளர்முக நாடுகளின் பழக்கம் காரணமாக மிகவேகத்தில் கிடைக்கக்கூடிய இணையவசதியுள்ள வளர்ந்த நாடுகளின் இணைய வழிக்கற்றல் செய்ற்பாட்டை கண்மூடித்தனமாக நடைமுறைப்படுத்துவதை எமது கல்விபுலத்தினர் மீள்வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும்.

பொதுவாக இலங்கைப் பல்கலைக்கழக இணையழி கல்வியில் அறிமுறை அறிவைப் பெற முடியுமானாலும், செயல்முறை அறிவைப் பெறுவது தொடர்பான பிரச்சினை மாணவர்கள் எதிர்கொள்ளும் அடுத்த பெரிய சவாலாகும். மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தி கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது, தத்துவார்த்த விடயங்களில் தெளிவைப் பெறுவது மட்டுமே சாத்தியமானது, ஆனால் நடைமுறை அல்லது சோதனை அறிவைப் பெறுவது மிகவும் கடினம்.

ஆகவே மேற்கத்தேய நாடுகளின் மெய்நிகர் வகுப்பறைகளை அவர்கள் குறிப்பிடும் செயலிகளின் வழியாக மட்டுமே இலங்கை போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதாகிறது. ஆகவே, அதற்கான மாற்று வழிகள் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக புதிய செயலிகள், மற்றும் எமக்குப் பொருத்தமான மென்பொருள் உருவாக்கங்கள் பற்றிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

**(தொடரும்...)**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் சம்பந்தன் வெளியிட்ட அறிக்கைக்கு உடன்பட ரெலோ மறுப்பு

ஜெனிவாவிவகாரத்தை ஒட்டி, இலங்கை வெளிவிவகார அமைச்சரின் உரைகளுக்கு பதில் என்ற கருத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் அதன் தலைவர் சம்பந்தன் வெளியிட்ட அறிக்கைக்கு உடன்பட முடியாது எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் அந்த அமைப்பின் ஊடக வாரியம் ஊடாக நேற்று பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

மனித உரிமைச் சபையில் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆற்றிய உரைக்கு பதில் அளிக்கும் முகமாக சம்பந்தர் ஐயா ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கை சம்பந்தமாக எமது நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவ்வறிக்கையில் கூட்டமைப்பாக எமது தலைவரின் (செல்வம் அடைக்கலநாதனின்) பெயர் இணைக்கப்பட்டு இருந்தபோதிலும், எமது பரிசீலனைக்காக அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாது வெளியிடப்பட்டமை வருத்தத்துக்குரியது.

ஜெனிவா கூட்டத்தொடரில் மனித உரிமைச் சபையின் அமர்வில் தமிழ் மக்களுக்காக நீதிகோரி கொண்டுவரப்பட இருக்கின்ற பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய கோரிக்கையை மூன்று தமிழ் தேசிய கட்சிகளின் கூட்டுத் தலைமைகள், சமூக அமைப்புக்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்டு அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பி வைத்திருந்தோம்.

இருப்பினும் மாதிரி வரைவிலே நாம் கோரிக்கை விடுத்த முக்கியமான விடயங்கள் உள்வாங்கப்படாமலும், முந்தைய பிரேரணைகளிலிருந்த உறுதியான பல சரத்துக்கள் தவிர்க்கப்பட்டமையையும் அவதானித்து இருந்தோம்.

சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணை பலமான, உறுதியான சரத்துக்களை உள்ளடக்கியதாக அமையுமிடத்தில்தான் நம்முடைய இனத்திற்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற வகையில் அதை பலப்படுத்தும் வகையாக தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருப்பவர்களும், சர்வதேச உறவுகள் மற்றும் சமூகமும், இணை அனுசரணை நாடுகளும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த இக்கட்டான, இறுதி வரைவின் வடிவம் என்னவென்று தெரியாமல் இருக்கின்ற சூழ்நிலையிலே இருக்கின்ற வரைவை பிரேரணையாக வெற்றிகரமாக நிறைவேற்றும்படி இணை அனுசரணை நாடுகளை கோருவது எமது முயற்சியை பலமிழக்கச் செய்வதோடு குழப்பகரமான சூழ்நிலையை ஏற்படுத்துவது மாத்திரமல்லாமல் எமது மக்களின் நீதிக்கான போராட்டத்தினையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி கிடைப்பதையும் பலவீனமடையச் செய்யும். ஆகவே இந்த அறிக்கைக்கு நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம்.

மனித உரிமைச் சபையில் அங்கத்துவ நாடுகளிடம் எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையான பலமான சரத்துக்களை உள்ளடக்கிய பிரேரணையை நிறைவேற்றுமாறு கோரிக்கை வைப்பதுதான் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி நிற்கும் எமது மக்களுக்கு நாம் செய்யும் தலையாய கடமையாக இருக்கும். தவிர அரச பிரநிதிகள், அமைச்சருடைய கருத்துக்களுக்கு பதில் அளிப்பதில் நேரம் கடத்துவது சரியான ஒன்றாக இந்த நேரத்தில் அமையாது.

எமது ஒன்றிணைந்த கோரிக்கையும், ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகரது அறிக்கையிடப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கியதாக மனித உரிமைச் சபையில் எமது மக்களுக்கான நீதியை உறுதிப்படுத்துவதாகவே சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணை அமைய வேண்டும் எனவும் அதை வெற்றி பெற வைக்க வேண்டும் எனவும் அங்கத்துவ நாடுகளை நாம் கோருகிறாம். இதுவே எமது நிலைப்பாடு.

எமது மக்களின் நீதிக்கான உரிமைக்கான போராட்டத்தில் எமது கட்சி தொடர்ந்தும் உறுதியுடன் பயணிக்கும். – என்று உள்ளது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்துவதையும் இலங்கை தொடர்பான பிரேரணை வரைவில் சேருங்கள்!

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் கோரிக்கை

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்துதலை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்குமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் –

‘2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மீதான பூச்சிய வரைவுத் தீர்மானம் தொடர்பில் இணை – அனுசரணை நாடுகளின் உறுப்பினர்களுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கும் தமிழர்களின் மேன்முறையீடு’ என்ற தலைப்பில் மேற்படி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான தவத்திரு வேலன் சுவாமிகள், எஸ். சிவயோகநாதன், வண. பிதா. கந்தையா ஜெகதாஸ் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்துதலை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்குதல் தொடர்பிலானது –

கீழே ஒப்பமிட்டுள்ள – பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் – பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பினர் மற்றும் வடக்கு – கிழக்கு சிவில் சமூக மற்றும் சமய அமைப்புக்களைச் சேர்ந்தோருமாகிய நாங்கள் மனித உரிமைகள் சபையின் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மீதான பூச்சிய வரைவுத் தீர்மானமானது குறிப்பாக தமிழ்ச் சமூகத்தினுடைய அடிப்படை எதிர்பார்ப்புக்களையேனும், விசேடமாக தமிழர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றமை மற்றும் தமிழப் பெண்களை வன்புணர்ந்தமை அடங்கலான இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் புரியப்பட்ட கொடூரமான குற்றங்களின் பொருட்டான சர்வதேசத்தின் பொறுப்புக்கூறலைப் பூர்த்திசெய்யவில்லை எனக் கருதுகிறோம்.

இணை – அனுசரணை நாடுகளின் உறுப்பினர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கும் போர்க் குற்றங்கள், மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள இனப்படுகொலை ஆகியவற்றிற்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்குவதற்கான மேன்முறையீட்டின் பொருட்டு நாம் இதனை வரைகிறோம்.

நிலைவரத்தின் தீவிரத்தன்மையின் காரணமாக, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை வலியுறுத்தி ஒரு மாதத்திற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதியன்று தமிழர்கள் ஒன்றிணைந்து தங்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். இந்த அழைப்பானது அண்மையில் வடக்கு – கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களினால் ஒழுங்குசெய்யப்பட்டு ஆயிரக் கணக்கான பொதுமக்களின் பங்குபற்றிய பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை (P2P) என்ற பேரணியின் மூலமாக வலுச்சேர்க்கப்பட்டிருந்தது.

போர்க் குற்றங்கள், மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள இனப்படுகொலை ஆகியவற்றின் பொருட்டு நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் எல்லா நம்பிக்கையையும் நாம் இழந்துள்ளமையினாலேயே இவ் வேண்டுகோளை நாம் விசேடமாக தங்களிடம் வலியுறுத்திக் கோரியிருந்தோம்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தாமல் விடுதலானது கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது, அது இலங்கையின் அரசியற் தலைவர்களும் பாதுகாப்புப் படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து மேலும், இப்போக்கு எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களிற்கு எதிரான சர்வதேசக் குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும். எனவே இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தாமல் விடப்படின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவல்ல இந்த அபாயத்தைத் தீவிரமாகக் கவனத்திற் கொள்ளுமாறு நாம் தங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் தற்போதைய உயர் ஆணையாளராகிய மிச்சேல் பச்சலெட் அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதியிடப்பட்ட தனது அறிக்கையில், இலங்கையிலுள்ள நிலைவரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை நோக்காகக் கொண்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் உயர் ஆணையாளர்கள், ஒன்பது சுயாதீன ஐ.நா. நிபுணர்கள் மற்றும் இலங்கை சம்பந்தமான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வல்லுநர்கள் குழுவின் சகல உறுப்பினர்களும் அடங்கலாக இருபது முன்னாள் ஐ.நா. அதிகாரிகள் ‘யுத்த விதைகளை விதைத்தல்’ எனத் தலைப்பிடப்பட்டு 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வழங்கிய தமது அறிக்கையில் இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தப்பட வேண் டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கையானது தனது நீதித்துறை நிறுவனங்களை அதனுடைய பாதிப்புற்றோரிற்காகச் செயற்பட முடியாதவையாக ஆக்கியுள்ளது என்பதே கருத்திற் கொளள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே, சர்வதேச அல்லது வெளிப்புற நியாயாதிக்கத்தினூடாக நீதியை நிலைநாட்டுவதன் பொருட்டு பாதிப்புற்றோருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குமாகப் பணியாற்றுவதற்காக உயர் ஆணையாளரின் பரிந்துரைகளை நாம் மீள வலியுறுத்துகிறோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) போன்ற பொறுப்புக்கூறலுக் கான வர்வதேச வழிவகைகள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும் எனக் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களிற்கு எதிராகப் புரியப்பட்டுள்ள சர்வதேசக் குற்றங்களின் சில உதாரணங்கள்: –

1.ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பொறுப்புக்கூறுதலுக்கான நிபுணர்கள் குழுவினுடைய 2011ம் ஆண்டு பங்குனி மாத அறிக்கையின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆயுதம் தாங்கிய யுத்தத்தின் இறுதி நிலைகளின் போது போர்க் குற்றங்களும் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களும் புரியப்பட்டுள்ளன எனவும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் மரணித்துள்ளனர் எனவும் நம்பத்தகு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.இலங்கை மீதான நடவடிக்கை தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் 2012 நவம்பர் மாத அறிக்கையின் பிரகாரம் 2009 ம் ஆண்டின் இறுதிக் கட்ட யுதத்தத்தின் போது 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமற் போயுள்ளனர்.

3.அரசாங்கத்தால் யுத்த சூனிய வலயங்கள் (பாதுகாப்பு வலயங்கள்) எனக் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங்களில் இலங்கைப் படையினர் அடுத்தடுத்து குண்டுத்தாக்குதல்களையும் எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்ட போது பலர் கொல்லப்பட்டனர். வைத்தியசாலைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்களின் மீது கூடக் குண்டுகள் வீசப்பட்டன. பலர் பட்டினியின் காரணமாக இறந்ததமையுடன் மருத்துவ சிகிச்சையின்மையால் குருதிப்பெருக்கேற்பட்டும் மரணித்தனர்.

4.2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (ITJP) இ தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாக கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட கற்பழிப்பு முகாங்கள் பற்றிய விவரங்களை ஐ.நா விடம் கையளித்தது.

5. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 ஏப்ரல் மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, இலங்கையில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர்.

6.குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அடங்கலாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமறபோயுள்ளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஐ.நாவின் பணிக்குழுவானது உலகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் இரண்டாவது அதிகூடிய எண்ணிக்கை இலங்கையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேசக் குற்றங்களுக்குரிய பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள பொய்யான வாக்குறுதிகளின் வரலாறு:–

அடுத்துவந்த இலங்கை அரசாங்கங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) தீர்மானங்களை அமுற்படுத்தத் தவறியுள்ளமையையும் அடுத்துவந்த இலங்கை அரசாங்கங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) தீர்மானங்களை அமுற்படுத்தத் தவறியுள்ளமையையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நாம் விரும்புகிறோம்.

முன்னய அரசாங்கமானது அது இணையனுசரணை வழங்கிய தீர்மானத்தை அமுற்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது மாத்திரமல்லாது, முரணாக சனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களும் தாம் UNHRC தீர்மானத்தை அமுற்படுத்த மாட்டோம் எனத் திரும்பத்திரும்பவும் ஆணித்தரமாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதய புதிய அரசாங்கமானது ஒரு படி கூடுதலாகச் சென்று தீர்மானங்கள் 30/1, 34/1 மற்றும் 40/1 களுக்குரிய இணையனுசரணையிலிருந்து விலகியுள்ளதுடன் UNHRC பொறுப்புக் கூறல் செயற்பாட்டிலிருந்தும் வெளிநடப்புச் செய்துள்ளது.

மேலும், UNHRC இனை இழிவுபடுத்தும் விதமாக, சிறுவர்கள் அடங்கலாக பொதுமக்களைக் கொலை செய்தமைக்காகத் தண்டிக்கப்பட்டு

→ 11

காலைக்கதிர்
Kalaikkathir

# ராஜபக்ஷ குடும்பத்தின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இயங்குகிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## யாழ். மாநகர சபையைக் கலைக்கச் சதி என்று மேயர் மணி குற்றச்சாட்டு

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

ராஜபக்ஷ அரசின் நிகழ்ச்சி நிரலில் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிசெயற்படுகின்றது என யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றஞ்சாட்டினார்.

யாழ். மாநகர சபையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப யாழ்.மாநகர சபையைக் கலைத்து அரசுக்குச் சார்பாக இந்த மாநகர சபையைப் பொறுப்பேற்பதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷவை வெல்ல வைப்பதற்காக பல பிரயத்தனங்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செய்தனர்.

அதேபோல் தற்போது மாநகர சபையைக் கலைப்



பதற்காக மஹிந்த குடும்பத்தின் கைக்கூலியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சிலர் செயற்படுகின்றனர். - என்றார்.

# கூட்டமைப்புடன் இனிவரும் காலங்களில் இணைந்து செயற்படமாட்டாது முன்னணி

## அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியை சிவில் சமூகத்தினர் கைவிட வேண்டும் என்று கஜேந்திரகுமார் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இனிவரும் காலங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த விடயத்திலும் இணைந்து செயற்படாது.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்று வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பானது கடந்த தேர்தலின் போது சிறிய ஆட்டம் கண்டிருந்த நிலையிலும்கூட தற்போதைய அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு இலங்கைக்கு எதிரான பிரேரணை வரைவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆதரித்து கையொப்பமிட்டு அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

இது தமிழ் மக்கள் மீது மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதுகில் குத்திய ஒரு செயற்பாடாகும். எனவே, இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைப்பதாக இனி எந்தச் சிவில் சமூகத்தினரோ அல்லது மதகுருமாரோ முன்வர வேண்டாம். அவ்வாறான முயற்சிகளை அவர்கள் கைவிட வேண்டும். அத்தோடு நாமும் நாடாளுமன்றத்திலும் அல்லது வேறு செயற்பாடுகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இன்றிலிருந்து சேர்ந்து பயணிக்கமாட் டோம். - என்றார்.

# அமைச்சர் விமலுடன் தனிப்பட்ட முரண்பாடுகள் எதுவும் இல்லை

## 'மொட்டு'வின் செயலர் சாகர கூறுகின்றார்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணிக்குள் நிலவும் கருத்து முரண்பாட்டைக் கொண்டு ஒரு தரப்பினர் அரசைப் பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் கவனம் செலுத்தவுள்ளோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

இதுதொடர்பில்இன்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அனைத்துப் பங்காளிக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி கூட்டணியை உருவாக்கியது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியாக ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டோம்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை உருவாக்கினர்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமாயின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல்கட்சிகளும்கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பல்வேறு கொள்கையைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியமைத்துள்ளபோது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பானதொரு விடயம்.

முரண்பாடுகளுக்கு உள்ளக மட்ட பேச்சுக்கள் ஊடாக மாத்திரமே தீர்வைக் காண முடியும்.

கூட்டணியின் உள்ளகப் பிரச்சினைகளைப் பொது இடங்களில் பகிரங்கப்படுத்துவதால் முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும். அமைச்சர் விமல் வீரவன்ஸவின் செயற்பாடுகளைக் கடந்த காலங்களில் சுட்டிக்காட்டினோம். இவருக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் கிடையாது. கூட்டணியில் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்பினர் அரசைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் உரிய கவனம் செலுத்தப்படும்.

கூட்டணி பலமாக இருந்தால் மாத்திரமே அரசை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

ஆளும் கூட்டணியையும், அரசையும் ஒருபோதும் பலவீனப்படுத்த இடமளிக்க முடியாது. - என்றார்.

# நாயாற்றுக் கடல் நீர் ஏரியில் மூழ்கி ஒருவர் பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, மார்ச் 08

முல்லைத்தீவு, நாயாற்றுக் கடல் நீர் ஏரியில் இன்று காலை குளிக்கச் சென்றவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நால்வர் குளித்துக்கொண்டு இருந்த நிலையில் நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் மூவர் கரை ஏறியுள்ளார்கள். ஒருவர் காணாமல் போயுள்ளார்.

காணாமல்போனவரைத் தேடும் பணி சுமார் மூன்று மணிநேரம் முன்னெடுக்கப்பட்டபோது கடலில் இருந்து காணாமல்போனவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் வவுனியாவைச்



சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

சடலம், பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அரசமைப்பு வரைவு இம்மாத இறுதியில்

## நீதி அமைச்சரிடம் கையளிக்க ஏற்பாடு

புதிய அரசமைப்பின் ஆரம்ப வரைவு இம் மாத இறுதியில் அரசிடம் கையளிக்கப்படவுள்ளது என அரசமைப்பை உருவாக்குவதற்கான நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர் குழு 6 மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டது.

இந்தநிலையில், இந்தக் குழு அதன் முதல் அறிக்கையை இந்த மாத இறுதிக்குள் அரசிடம் கைய ளிக்கவுள்ளது.

அரசமைப்புக்கான வரைவைத் தயாரிக்கும் குழு கடந்த ஆறு மாதங்களில் அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மேற்படி அனைத்துத் தரப்பினர்களதும் கருத்துக்களை உள்வாங்கி, தயாரிக்கப்பட்டு வரும் ஆரம்ப வரைவு நீதி அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்கான நிபுணர் குழுவின் பதவிக் காலமும் இந்த மாதத்துடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

வரைபை நீதி அமைச்சர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து, அமைச்சரவையின் அனுமதியுடன் வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

# கொரோனாவால் மரணிக்கும் சடலங்களை வைத்து மீண்டும் ஒரு பிரிவினையை கையாள்கிறது அரசு!

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

அரசாங்கம் தரும் நிதியை தங்களால் வழுங்கப்பட்ட நிதியாக காட்டிக் கொள்வதற்கான முயற்சியாகவும், நகைச்சுவைக் கூட்டமுமாகவே மட்டக்களப்பில் கடந்த வாரம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் திகழ்ந்தன. மாவட்டத்தின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து நாடுகளையும் நாங்கள் ஊக்கப்படுத்த வேண்டும் எனவும், கிறிஸ்தவ, இஸ்லாமிய சகோதரர்களின் கொரோனா உடலங்கள் குறித்தான கோரிக்கையை வைத்து இரு சமூகங்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தும் விதமாக அரசு தன் அரசியலைச் செய்ய முற்படுகின்றமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மட்டு ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது தற்போதை சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் பெயரளவில் தான் அவை அபிவிருத்திக் கூட்டம் என்று சொல்லலாம் ஆனால் நடந்த விடயங்ளை வைத்து அவை நகைச்சுவைக் கூட்டங்கள் என்றே சொல்ல வேண்டும். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதியை உரிய அதிகாரிகள் பொருத்தமான இடங்களுக்கு பகிர்ந்த விடயங்களை அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற ரீதியில் ஒருவர் இருந்து அனுமதி வழுங்கியமை மாத்திரம் தான் அதில் இடம்பெற்றது. மக்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் பல விவாதங்களை மேற்கொண்டும் அவற்றுக்கான எவ்வித தீர்மானங்களும் அந்தக் கூட்டங்களில் எடுக்கப்படவில்லை.

சில கூட்டங்களுக்கு ஊடகங்களுக்கும் அனுமதியளிக்கப்படவில்லை என்றே நினைக்கின்றேன். அத்துடன் சில கூட்டங்களில் பிரதேச சபை உறுப்பினர்களுக்குக் கூட அனுமதியளிக்கப்படவில்லை என்றும் கேள்விப்பட்டோம். எனவே நடைபெற்றது ஓர் அபிவிருத்திக் குழுக்கூட்டம் என்று சொல்ல முடியாது. அனைவரின் நேரத்ஷ்யும் வீணடிக்கின்ற கூட்டமாகவே எங்களுக்கு அது; தென்பட்டது.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் மண்அகழ்வு, இல்மனைட்டு, தொல்பொருள், மேய்ச்சற்தரைப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் எங்களால் கேள்வியெழுப்பப்பட்டன. அதிலும் குறிப்பாக மண் அகழ்வு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான அதிகாரி அதாவது பதில் வழுங்கக் கூடிய அதிகாரி எவ்வித கூட்டங்களுக்கும் கலந்து கொள்ளவில்லை. பதில் சொல்ல முடியாத கனிஷ்ட அதிகாரிகளே அந்தக் கூட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். இவ்வாறிருக்கையில் எவ்வாறு கூட்டங்களில் பிரச்சினைகளைக் கேட்பது, தீர்மானங்களை எடுப்பது?

அதே போன்று கிரான் பிரதேசத்தில் முறுத்தானை பகுதியில் மண் அகழந்து தற்போது அங்கிருக்கும் இரண்டு பாலங்கள் இடிந்து விழும் தறுவாயில் இருப்பதாக மக்கள் தெரிவித்தமைக்கமைவாக நான் உட்பட எமது சக நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டத்தில் மக்களுடன் இணைந்து பல அழுத்தத்தைக் கொடுத்தோம். அதன் பின்னரே அங்குள்ள ஒரு சில அனுமதிப்பத்திரங்களை நிறுத்துமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. நடைபெற்ற நான்கு கூட்டங்களிலும் முக்கியமாக எடுக்கப்பட்ட தீர்மனம் அது மாத்திரமே என்றுதான் சொல்ல முடியும்.

இந்த மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித கவனமும் எடுப்பதாக அந்தக் கூட்டங்கள் நடைபெறவில்லை. தங்களுடைய அரசியலை வளர்த்துக் கொள்வதற்கான கூட்டமாகவே இது மாற்றப்பட்டிருந்தது. அதாவது அரசாங்கம் தரும் நிதியை தங்களால் வழுங்கப் பட்ட நிதியாகக் காட்டிக் கொள்வதற்கான முயற்சியாகவே இந்தக் கூட்டங்கள் திகழ்ந்தன.

அடுத்த விடயமாக ஐ.நா. மனித உரிமைப் பேரவை தொடர்பில் பலரும் பலவாறாகக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். இன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்கள் என்ற வகையில் இலங்கைக்கு எதிரானதொரு தீர்மானத்தை அனைத்து நாடுகளும் வாக்களித்து கொண்டு வர வேண்டும் என்பதுதான் நாங்கள் முயற்சிக்க வேண்டிய விடயம். இன்று நாங்கள் எடுக்கும் தீர்மானத்தை வலுச்சேர்க்கச் சொல்லி இலங்கையிலும், சர்வதேசத்திலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய விடயம். அதிலும் அரசியல் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்பாடில்லாமல் நடக்கின்றதென்பது மேலும் வரவேற்கத்தக்க விடயம். அவ்வாறில்லாமல் அரசியல் பிரமுகர்கள் நாங்கள் அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொள்ளும் போது இது அரசியலுக்கான ஒரு விடயம் என்று மாற்றப்படுகின்றது.

அந்த வகையில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை எவ்வாறாவது நிறைவேற்றியே ஆக வேண்டும். அத்துடன் குறிப்பாகச் சொல்லப்போனால் இது இலங்கைக்கு எதிரானது என்பதை விட மனிதஉரிமை மீறலுக்கு எதிரானது என்பதையே நாங்கள் வலியுறுத்துகின்றோம் இதற்கு நிச்சயமாக அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து நாடுகளையும் நாங்கள் ஊக்கப்படுத்த வேண்டும். இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக நாங்கள் முயற்சிக்க வேண்டும்.

அடுத்த விடயமாக அண்மைய காலமாகத் தமிழ் முஸ்லீம் உறவு பலமாக வந்துகொண்டிருக்கின்றது என்பதை அறிந்து இந்தக் கொரோணா மரண உடலங்களை வைத்து மீண்டும் ஒரு பிரிவினையை அரசு கையாளுகின்றது. இஸ்லாமியர்கள் மாத்திரமல்லாமல் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அடக்கம் செய்வதே அவர்களின் மத ரீதியான முறையாகும். அந்த வகையில் இந்த இரண்டு மதத்தவர்களுடைய உடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் அதனை வைத்து மீண்டும் இந்த தமிழ் முஸ்லீம் உறவைப் பிரிக்கும் முகமாகவும், அவர்களின் ஒற்றுமைகளைப் பாதிக்கும் வகையிலும் இரணைமடுப் பிரதேசம் தொடர்பான சில தீர்மானங்களை அரசாங்கம் எடுத்துள்ளது.

உண்மையில் இறந்த உடலங்களை அவர்களின் உறவினர்கள் இருக்கும் இடத்தைத் தாண்டி சுமார் 200 கிலோமீற்றர்களுக்கும் மேல் கொண்டு சென்று புதைப்பதற்கு அந்த உறவினர்கள் உடன்படமாட்டார்கள். அவர்கள் பிரதேசங்களில் உடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழுங்கத் தயார் எனும் போது இதனை வைத்து அரசாங்கம் அரசியல் செய்வதென்பது மிகவும் கேள்விக்குட்படுத்தும் விடயமாகும். கிறிஸ்தவ, இஸ்லாமிய சகோதரர்களின் கோரிக்கையை வைத்து அரசியல் செய்கின்ற அரசு அதன் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தினூடாகவும் தன் அரசியலைச் செய்ய முற்படுகின்றமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்று தெரிவித்தார்.

### இலங்கைக்கு ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோர்னிங் பத்திரிகைக்கு அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பலம் வாய்ந்த நாடுகள், உறுப்பு நாடுகளுக்கு நிதியுதவி மற்றும் கடன்களை வழுங்குவதன் ஊடாக இலங்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதை அச்சுறுத்துகின்றன.

இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள 21 நாடுகளில் ஒரு மேற்கு நாடேனும் இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபை மேற்குலக நாடுகளுக்குச் சார்பான அமைப்பாகும்.

இலங்கை மீதான புதுப்பிக்கப்பட்ட பிரேரணை நகல் இணை அனுசரணை நாடுகளால் இன்று அதிகாரபூர்வமற்ற கலந்துரையாடலுக்காக முன்வைக்கப்படவுள்ளது.

குறித்த பிரேரணையை இணை அனுசரணை நாடுகள் இருபக்க ஒத்திசைவுடன் நிறைவேற்ற எதிர்பார்த்திருந்தாலும், இலங்கை வாக்கெடுப்புக்குச் செல்லத் தீர்மானித்துள்ளது.

கொரோனா மரணங்களை அடக்கம் செய்யும் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எமக்கு இருந்த 10 வாக்குகளை 15 வரை அதிகரிக்கச் செய்யும்.

ஐ.நாவில் இலங்கை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 20 அல்லது 21ஆம் திகதிகளில் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கு ஏற்ற விதத்தில் நாம் தயார்படுத்தல்களை மேற்கொள்கின்றோம் – என்றார்.

# பெண்மையின் பெருமையை.........

(6ஆம் பக்கத் தொடர்ச்சி......)

பெண்களைப் பொறுத்தவரை சட்டரீதியாகவும், சமூக ரீதியாகவும் எல்லோரையும் போல அவர்களுக்கும் சமூகநீதி வழுங்கப்பட வேண்டும். ஆணும், பெண்ணும் சமமென்று பேசப்படுகிறதே தவிர அவர்களது நடை முறைவாழ்வில் கிடைக்காது இருபதால் அதைக் கிடைத்திடச் செய்திடல் அவசியமாகும். பெண்கள் பொருளாதார ரீதியாகவும், இன, சமூக ரீதியாகவும் பாதிக்கப்படும் நிலையினை மாற்றிட முயலுதல் அனைவரதும் தார்மீகக் கடமையாகும். பெண்களின் பிரச்சினைகளை அணுகவும், அவற்றை அகற்றிடவும் ஆற்றல் மிக்க அதிகாரிகள் நியமிக்கப்படுதல் அவசியமாகும். காவல் துறையில் கூட பெண்களின் நிலை பரிதாபமாகவே காணப்படுகிறது.

காவல் துறையில் உயர்பதவியில் இருக்கும் பெண்களுக்கே தக்க பாதுகாப்பு இல்லாதிருக்கிறது. மேலதிகாரிகளால் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகும் நிலை இன்றும் காணப்படுகிறது. அது போன்று ஏனைய உயர்பதவிகளில் இருக்கும் பெண்களுக்கும் - அவர்கள் பெண்கள் என்ற காரணத்தாலேயே அவர்களும் பல மன உளைச்சல்களுக்கு ஆளாவதும் - சிலர் மனமுடைந்து தற்கொலை முயற்சிக்கே சென்று விடுவதும் - ஏன், தற்கொலையே செய்துவிடுவதையும் காணமுடிகிறது. இவை அனைத்துமே சமூகத்தைவிட்டுக்களையப்பட வேண்டியனவாகும்.

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்து வோம்**
**வைய வாழ்வு தன்னில் எந்த**
**வகையினும் நமக்குள்ளே**
**ஆண்களோடு பெண்களும்**
**சரிநிகர் சமானமாக**
**வாழ்வம் இந்த நாட்டிலே**

அச்சமும் நாணமும் நாய்களுக்கு வேண்டுமாம் , கற்பு நிலை யென்றால் இரு சாராருக்கும் பொதுவாக்குவோம் - என்று முழக்கமிட்டுப் பெண்ணுரிமை பேசி நின்றான் புரட்சிக்கவி பாரதி. பாரதி வீர முழக்கத்தைப் படிப்பதோடு நின்று விடக் கூடாது. அதனைக் கருத்தில் இருத்தி யாவரும் செயலாக்குதலே மிகவும் அவசியமானதாகும். தாயாய் , தமைக்கையாய், தங்கையாய், மனைவியாய், மகளாய், மருமகளாய், பேத்தியாய் வாழ்வில் இணைந்திருக்கும் பெண்ணை - பெண்மையினைக் காப்பது அனைவரதும் தலையாய பொறுப்பு அல்லவா ?

பெண்ணால் நலன் அடையும் நாங்கள் பெண்களைக் காத்திடுதல் கட்டயமான கடன் அன்றோ! பெண்ணைத் தூற்றுவதும், பெண்ணை இழிவு செய்வதும், பெண்ணை மனமுடையச் செய்வதும், பெண்ணை அடிமை என்று நினைப்பதும், பெண்ணைப் போகப்பொருள் என்றே எண்ணுவதும் பொருத்தமுடையதா? அனைவரும் சிந்திப்போம்!

மகளிர் தினம் என்பது ஒரு நாளில் மேடை போட்டு சொற்பொழிவுகள் பொழிந்து நிற்பதல்ல! வாழ்வின் துணையாக, இணையாக இலங்கிடும் பெண்ணை, பெண்மையைக் காப்பதுதான் நம் அனைவரதும் தலையாய கடமையாகும்.

அவர்களுடைய உரிமைகள் பேணப்பட வேண்டும். ஏனெனில் உலகெங்கும் சிறந்த பெண்களே உள்ளனர். ஆனால் அவர்களுக்கான அழகான வாழ்க்கை கிடைத்திருக்கிறதா என்பதே கேள்வியாகி நிற்கிறது.

### இரண்டு மாதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்தது.

நோய் நிலைமை காரணமாக இந்தக் குழந்தை வெலிமடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குழந்தைக்கு நுரையீரல்பாதிப்புஏற்பட்டிருந்தது இனங்காணப்பட்டது.

பின்னர் வெலிமடை வைத்தியசாலையிலிருந்து பதுளை பொது வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்ட நிலையில், குழந்தையின் இதயத்தில் நீர் நிறைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றும் இதன்போது உறுதிப்படுத்தப்பட்டது.

### பேரணியில் செல்லவில்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பினும் பேரணி திட்டமிட்டவாறு மாபெரும் எழுச்சியுடன் இடம்பெற்றது.

இந்த பேரணியில் பங்கு கொண்ட பலரிடம் தற்போது பொலிஸார் வாக்குமூலம் பெற்று வருகின்றனர். இதன் அடிப்படையில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் மன்னார் மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் நீதிமன்றத் தடையை மீறி யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கலந்து கொண்டார் எனத் தெரிவித்து மன்னார் மற்றும் பருத்தித்துறை குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

வாக்குமூலம் வழங்கிய யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் 'நான் பருத்தித்துறையில் பேரணியில் பங்குகொள்ளவில்லை. ஆனால் பருத்தித்துறைக்கு எனது தனிப்பட்ட விடயமாக பயணித்தேன். இதன்போது பேரணி அப்பாதையால் சென்றதன் காரணமாக எனது வாகனத்தில் பயணிக்க முடியவில்லை. இவ்வாறு வாகனத்தில் பயணிக்க முடியாத காரணத்தால் வாகனத்தில் இருந்து இறங்கி கால்நடையாக பயணித்தேன்.' என்ற சாரப்பட வாக்குமூலம் வழங்கியுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

இதனால் இவரது அரசியல் நிலைப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

### சர்வதேச குற்றவியல்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மரண தண்டனை வழங்கப்பட்டிருந்த ஒரேயொரு படைச்சிப்பாயும் தற்போதயஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், போர்க் குற்றங்கள் புரிந்தமைக்காக நம்பத்தகு முறையில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த பல்வேறு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றமையுடன் யுத்த நாயகர்களாக ஆகவும் மதிப்பளிக்கப்படு கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் யுத்தக் குற்றவாளியாக சந்தேகிக்கப்படுகின்ற ஓர் உத்தியோகத்தர் நான்கு நட்சத்திர அதிபதியாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

எமது மேன்முறையீட்டைத் தீவிரத் தன்மையுடன் கருத்திற் கொள்வதன் பொருட்டும் இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தப்பட வேண்டியமையை உள்ளடக்குவதன் பொருட்டும் இம்மேன்முறையீட்டை நாம் மேற்கொள்கிறோம். – என்று உள்ளது.

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று முதல் கொரோனா தடுப்பூசி!



நாடளாவிய ரீதியில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் நாட்டுக்கு வழங்கப்படும் 20 சதவீதமான தடுப்பூசிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டை வந்தடைந்தன.

அதன்படி, கொவெக்ஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சுகாதார அமைச்சுக்கு 14 லட்சம் அஸ்ட்ரா செனக்கா தடுப்பூசிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன.

தடுப்பூசியை இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே விமான நிலையத்தில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன்போதே 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொவிட் வைரஸ் நோயின் தாக்கம் அதிகமாக உள்ள பிரதேசங்களில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

# வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இராணுவம் உதவும்!



## யாழ். இராணுவ கட்டளைத் தளபதி தெரிவிப்பு

வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, பொருளாதார ரீதியாக அவர்களை முன்னேற்ற இராணுவம் உதவுமென யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு இராணுவத்தினரால் உலர் உணவு பொதி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதன்போது குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரியந்த பெரேரா மேலும் கூறியுள்ளவை வருமாறு -

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில், வருமானம் குறைந்த குடும்பங்கள் மற்றும் குழந்தை பெற இருக்கும் தாய்மார்களுக்கு மகளிர் தினமான மார்ச் 8 ஆம் (இன்று) திகதியை முன்னிட்டு, இராணுவத்தினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவத்தினரால் வருமானம் குறைந்த தலைமைத்துவ குடும்பங்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளமக்களுக்கு போஷாக்கு உணவு பொதிகள். அத்தோடு குழந்தை பெறவுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு இந்த உணவுப்பொருள்களை வழங்குவதில், யாழ்.இராணுவ கட்டளைத் தளபதி என்ற ரீதியில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த பொருளகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு உதவிய அனைத்து இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் படையணி தளபதிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இலங்கை இராணுவத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதேபோலவே யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தலைமையகம், யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பொருளாதார ரீதியாக வடக்கு மக்களை முன்னேற்றுவதற்கான சகல வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கத் தயாராக உள்ளது.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசியப் பாதுகாப்பு மட்டுமல்லாது விவசாயம் மற்றும் பொது மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை இராணுவத்தினர் முன்னெடுக்கும் நிலையில் இங்கு உள்ள படித்த முதியவர்களின் ஆலோசனைகளை பெற்று இராணுவத்தினராகிய நாங்கள், பல்வேறு பட்ட உதவிகளை பொதுமக்களுக்கு மேற்கொள்வதற்கு எந்நேரமும் தயாராக உள்ளோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இராணுவத்தால் உலர் உணவுப் பொதி!

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள வசதி குறைந்த பெண் தலைமைத்துவ மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் நெறிப்படுத்தலில் யாழ்ப்பாண மாவட்ட பலாலி கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் ஆயிரம் பேருக்கு கடந்த சனிக்கிழமை உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரால் பல்வேறு பட்ட சமூக நல நோன்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குறித்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் யாழ். மாவட்ட இராணுவ உயரதிகாரிகள்,பலாலி கட்டளை தலைமையாக உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். வீடொன்றினுள் புகுந்து இனந்தெரியாத கும்பல் தாக்கு!

யாழ் நகரில் வீடொன்றுக்குள் நுழைந்து இனந்தெரியாத கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள பத்திரிகை அலுவலகம் ஒன்றுக்கு முன்பாக உள்ள வீடொன்றின் மீதே இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுக்கு இரண்டிற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் நள்ளிரவு வேளை சென்ற இனந்தெரியாத கும்பலொன்றே இந்தத் தாக்குதல் சம்பவத்தை நடத்தியுள்ளது.

இதன் போது வீட்டின் முன்னால் கண்ணாடிகள் அடித்து நொறுக்கி வீட்டிலிருந்த பொருள்களும் அடித்து உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை பெப்ரவரியில் அதிகரித்தது!

கொழும்பு, மார்ச். 08

நாட்டில் இந்த வருடத்தில் கடந்த ஜனவரி மாதத்தைவிட பெப்ரவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆயிரத்து 682 ஆகக் காணப்பட்டுள்ளது.

எனினும் கடந்த பெப்ரவரி மாதத்தைப் பொறுத்தவரையில் நாட்டுக்கு வருகைத் தந்த வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் 2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் சுற்றுலாப்பயணிகளின் வருகை 99.3 வீதத்தினாலும் பெப்ரவரி மாதத்தில் 38 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோகம்: செய்ய முயன்ற கான்ஸ்டபிள் கைது!

பாடசாலை சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற குற்றச்சாட்டுக்காக நீலாவெளி பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 35 வயதுடையவர் ஆவார்.

13 வயது சிறுமியின் தாயாரிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம் சந்தேக நபர் சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமையுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை கோரிய தடுப்பூசியை வழங்குவதில் சிக்கல் நிலைமை!

## இந்திய நிறுவனம்

கொழும்பு, மார்ச். 08

இலங்கை கோரிய 10 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகளை குறைந்தபட்சம் ஏப்ரல் பிற்பகுதி வரை தங்களால் வழங்க முடியாது என சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்திய நிறுவனம், எழுத்து மூலம் இலங்கைக்கு தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று நேற்று (ஞாயிற்றுக் கிழமை) செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் 3ஆம் திகதி, இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்.பி.சி.) அனுப்பிய ஒரு கடிதத்தில் சீரம் நிறுவனத்தின் தடுப்பூசி உற்பத்தித் திட்டங்களில் ஒரு தடையை ஏற்படுத்தியுள்ளதாகவும் இது 'உங்களுக்கு எதிர்காலத்தில்' தடுப்பூசிகளை வழங்குவதற்கான திறனைப் பாதிப்பதாக வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை சீரம் நிறுவனத்திடம் 15 லட்சம் தடுப்பூசிக்கு 5.25 அமெரிக்க டொலர்களை செலுத்தியுள்ளது.

இதில் 5 லட்சம் டோஸ் பெப்ரவரி இறுதி வாரத்தில் சமூக தடுப்பூசி திட்டத்திற்காக பெறப்பட்டது. மீதமுள்ள 10 லட்சம் டோஸ் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# துப்பாக்கியுடன் இளைஞன் வவுனியாவில் கைதானார்!

வவுனியா, மார்ச். 08

வவுனியாவில் சட்டவிரோத துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவரை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

புளியங்குளம் விசேட அதிரடிப் படையினரிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்திலேயே வவுனியா - பாலமோட்டை வயல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற இளைஞரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்து சட்டவிரோத துப்பாக்கி (இடியன்துப்பாக்கி) கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை கைது செய்த விசேட அதிரடிப் படையினர் அவரை ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாலமோட்டை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## மண்பரிசோதனை

தாவரங்களை வளர்ப்பதற்காக மண்ணின் ஆரோக்கியத்தை சரிபார்க்க மண்பரிசோதனை அவசியமாகும். மண்ணின் பி.எச். அளவை சரிபார்த்து இது செய்யப்படுகிறது. மண்ணில் உள்ள ஊட்டச் சத்துக்களின் குறைபாடுகளை சோதிப்பதன் மூலம் அறியலாம். தாவரங்கள், பழங்கள், பூக்கள் ஆரோக்கியமான வழியில் வளர மண்ணின் பி.எச். அளவு 6.5 ஆக இருக்க வேண்டும். எனவே, நடவு செய்வதற்கு முன்னர் மண்ணின் பி.எச். அளவை நீங்கள் சரிபார்த்தால், நீங்கள் திட்டமிட்ட தாவரங்களை வளர்க்க தேவையான சரிசெய்தலை செய்யலாம். மண்ணின் பி.எச். அளவு அதிகரித்தால், மண்ணில் உள்ள முக்கிய ஊட்டச்சத்துக்கள் நைதரசன், பாஸ்பரஸ் மற்றும் இரும்பு விரைவில் மறைந்துவிடும். மண்ணின் பி.எச். அளவு குறையும் போது, மண்ணின் நச்சுத் தன்மையின் உயர்வு தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும். மண் பரிசோதனையின் முக்கியத்துவம்: ஊட்டச் சத்துக்களை அதிகமாக பயன்படுத்துவதால், இது மண்ணில் ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுக்கிறது, இது சுற்றுச்சூழல் நிலைமைகளை பாதிக்கிறது.

மண்ணைச் சோதித்தபின் எடுக்கப்படும் அறிக்கைகள், விண்ணப்பிக்க வேண்டிய உரங்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவுவதோடு தாவர வளர்ச்சிக்குத் தேவையான நுண்ணூட்டச்சத்துக்களின் எண்ணிக்கையையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி